# விடுதலைப்புலிகள்

குரல்: 73 தை - மாசி 1997 அன்பளிப்பு: 5/-


உள்ளே


- அரசாங்கத்தின் கொள்கையும் புலிகளின் நிலைப்பாடும் !
- ஆனையிறவு: 'அழித்தொழிப்புத் தாக்குதல் !'
- புளுகுணாவி அதிரடி !
- யாழ்ப்பாணத்தில் தமிழ்க்குழுக்கள்.
- ஜெயவர்த்தனாவின் மறைவு: தமிழரின் மனப்பதிவு.


**படைகளைப் பரவலாக்கிப் பெரும் நிலப்பரப்பைக் கைப்பற்றுவதும், குடாநாட்டுக்குத் தரைத்தொடர்பைத் திறப்பதுமே நோக்கம்!**

# வன்னியில் பெருமெடுப்பிலான படையெடுப்பு!

# எந்த முனையிலும் உக்கிரசமர் வெடிக்கலாம்!

## அகன்று பரந்து படைகளை நகர்த்துவது சிங்களத் தலைமைக்குச் சாத்தியமாகப் போவதில்லை!

**வன்னிப் பெரும் நிலப்பரப்பில், பாரிய அளவிலான தொடர் படையெடுப்பு நடவடிக்கை ஒன்றைச் சிங்களப் படைகள் தொடங்கிவிட்டன. அந்த நடவடிக்கைத் திட்டத்தின் முதற் கட்டம் வவுனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிலப்பகுதிகளை ஆக்கிரமித்துக் கட்டம் கட்டமாகக் கைப்பற்றுவதும், அதன் வாயிலாகக் குடாநாட்டுக்குக் கொழும்புடன் தரைவழி இராணுவத் தொடர்பை ஏற்படுத்துவதுமே படையெடுப்பின் நோக்கமாகும், எனினும், இந்தப் போர் நடவடிக்கைக்கு எதிரான உச்சத் தாக்குதலுக்குப் புலிகளின் போரணிகள் தயாராக நிறுத்தப்பட்டுள்ளதால், எந்தவேளையிலும், எந்த முனையிலும் உக்கிரச் சமர் வெடிக்கலாம். எனவே, அகன்று பரவிப் படைகளை நகர்த்துவது பேராபத்தை விளைவிக்கும் ஒரு காரியமாகவே சிங்களத் தரப்பிற்கு இருக்கப்போகின்றது.**



'' பிரபாகரனின் படைகள் நகரும் தமிழின் கொடிகள் உயரவே! எதிராளிகளின் படைகள் சரியும் தமிழர் தேசம் விடியவே!! ''

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கிய வன்னிப் பெருநிலப் பரப்பு மீதான புதிய படையெடுப்பு, இப்போது வவுனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெருமெடுப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்பல, படைக்கல வளங்களுடன் நகர்த்தப்படுகின்ற இந்த நடவடிக்கையானது –

தனி ஒரு படையெடுப்பாக அல்லாமல், படிப்படியாக, 'நிகழ்த்தப்படும் ஒரு பலகட்டத் தொடர் படையெடுப்புப் போருபாயத்தைக் கொண்ட நீண்ட காலத் திட்டம் எனவும் அறிய முடிகின்றது.

அடுத்த மாதத்தில் நடக்கவுள்ள சிறீலங்காவின் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக உத்தேச படையெடுப்பை ஆரம்பித்து வாக்கு வேட்டை நடாத்தும் நோக்கமும் அரசுக்கு உண்டு எனினும் இந்த வன்னிப் படையெடுப்பிற்கு. முக்கியமான இரண்டு காரணங்கள் இருக்க முடியும்.

முதலாவது, குடாநாட்டுப் படையினருடன் இராணுவத் தரைத்தொடர்பை ஏற்படுத்துவது.

இரண்டாவது, சர்வதேசமும், சிங்கள தேசமும் ஏற்றுக்கொள்ளத்தக்க பெரும் பின்னடைவு ஒன்றைப் புலிகளுக்கு வழங்க முயல்வது.

யாழ் குடாநாட்டில் நிறுத்தப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான படைத்துருப்புக்களுக்குரிய போர்த்தளபாடம் மற்றும் தனிப்பட்ட வசதிகளுக்கான விநியோகங்கள் இப்போது சிக்கலானவையாக மாறிவருகின்றன.

யாழ் மாவட்டத்துடனான சிங்கள அரசாங்கத்தின் பௌதீகத் தொடர்புகள் யாவுமே இன்றுவரை கடல், மற்றும் ஆகாய மார்க்கமாகத்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமது கடற்படை பலவீனமடைந்துவிட்டது என்று சந்திரிகா அம்மையார் வெளிப்படையாகப் பேசுமளவுக்கு – கடற் புலிகளின் செயற்திறன் காரணமாகச் சிங்களக் கடற்படையின் போர் வலு குன்றி – கடற் போக்குவரத்துக்களைப் பாதுகாப்பாக நிகழ்த்தக் கூடிய பலத்தை அது இழந்து வருவதனாலும் –

சிங்கள வான்படை வெளிப்படையாகவும், மர்மமான முறையிலும் தொடர்ச்சியாகச் சந்தித்து வரும் விமான இழப்புகள் காரணமாக, ஆகாய வழிப் போக்குவரத்து உத்தரவாதமற்ற தாய் மாறிவருவதனாலும் –

அத்தோடு, கடல் – ஆகாய வழிப் போக்குவரத்துக்களின் காரணமாகப் போர்ச்செலவு கட்டுப்படியாகாத அளவுக்கு உயர்ந்து வருவதாலும் –

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான ஒரு தரைவழிப்பாதை, சிங்கள அரசாங்கத்திற்கு அவசியமான அவசரத் தேவையாக இப்போது உள்ளது.

அத்தகைய ஒரு தரைவழி இராணுவத் தொடர்பை யாழ்ப்பாணததுடன் ஏற்படுதது

→


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## தமிழ்த்தேசிய விரோத அரசியலும் தமிழ்க்குழுக்களும்

இராணுவரீதியாக, தமிழரின் விடுதலைப் போராட்டம் நெருக்கடிகளைச் சந்திக்கும் ஒவ்வொரு காலகட்டத்திலும் 'அரசியல் நடவடிக்கைகள்' என்ற போர்வையில் – தமிழரின் போராட்டத்தை நலிவுறச்செய்யும் நாசகாரமுயற்சிகளில் தமிழ்க் குழுக்கள் ஈடுபடுவது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகிவிட்டது.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் ஈ. பி. ஆர். எல். எவ் செய்யமுயன்ற தமிழ்த் தேசிய விரோத அரசியல் முயற்சிகளைப்போல, இப் போது, ஈ. பி. டி. பி மற்றும் புளொட் போன்ற குழுக்கள் செய்ய முயற்சிக்கின்றன.

இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் உள்ள குடாநாட்டிற்குள் 'அரசியல் நடவடிக்கைகளுக்காக' என்று கூறிக்கொண்டு சென்றுள்ள இந்தத் தமிழ்க்குழுக்களை போராட்டத்திற்கு எதிரான ஒரு அரசியல் பிரச்சார ஆயுதமாகவே, சிங்கள அரசு, பயன்படுத்துகின்றது.

தமிழ்மக்களுக்கு எதிராக அழிவுகர யுத்தத்தை நடாத்திக்கொண்டிருக்கும்சிங்கள அரசையும் – அதன் படைகளையும் சர்வதேச ரீதியாக நியாயப்படுத்துவதுடன் தமிழ்மக்கள் மத்தியில் நாசவேலைகளைப் புரிவதும்தான் இந்தத் தமிழ்க் குழுக்களின் 'அரசியல் வேலை' ஆகும். இந்தக் குழுக்கள் குடாநாடு செல்வதற்கான பிரதான நோக்கமும் அவைதான்.

குடாநாட்டிற்குள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமைமீறல் சம்பவங்கள் வெளி உலகத்திற்குத் தெரியவருவதால் பல்வேறு விதமான அழுத்தங்களை சந்திரிகா அரசு எதிர்நோக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த மனித உரிமை மீறல்களுக்கு மூலகாரணமான இராணுவ நிருவாகத்தை சர்வதேச சமூகம் கேள்விக்குறியுடன் நோக்குகின்றது. எனினும், இராணுவவாத அணுகுமுறையையே கொள்கையாகக் கொண்ட சந்திரிகா அரசாங்கம், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலத்தில் இராணுவ நிருவாகம் நடைபெறுவதையே விரும்புகின்றது. இந்த நிலையில், தமிழ்க்குழுக்களின் உதவியுடன் ஒரு சிவில் நிருவாக முகமூடியை தனது இராணுவ நிருவாகத்திற்கு அணிவித்துவிடுவதற்கான ஆரம்பக் கட்டமே, குடாநாட்டிற்கு இக்குழுக்களை அனுப்பிய சந்திரிகா அரசாங்கத்தின் சதிநோக்கமாகும். தேர்தல் என்ற போர்வையில் ஒரு ஜனநாயகக் கேலிக்கூத்தை அரங்கேற்றி தனது தமிழின விரோதத் திட்டத்தின் அடுத்தகட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டமும் சந்திரிகா அரசாங்கத்திடம் உண்டு.

இத்தகைய முயற்சி ஒன்றை மேற்கொண்டு, முன்னர், இந்திய அரசு தோற்றதுபோலவே, சந்திரிகா அரசாங்கமும் தோல்வியடையப் போவது திண்ணம். இராணுவ ஆக்கிரமிப்பை மௌனமாக சகித்துக் கொண்டிருக்கும் எமது மக்கள், முன்னரைப்போலவே, தகுந்த சூழல் பிறந்ததும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி – அரசின் சதித்திட்டத்தை முறியடித்து – தமிழரின் தேசிய பலத்தை வலுப்படுத்துவர் என்பது நிச்சயம்.

அரசியல் தீர்வு, ஜனநாயகவழி முறைகள் என்ற ஏமாற்று நாடகங்களை வெகுகச்சிதமாக அரங்கேற்றி – மூடுதிரைக்குள் இருக்கும் தனது இராணுவக் கொள்கைகளுக்கு – வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்றுவிடுவதில், அம்மையார், அதீத அக்கறை காட்டுகின்றார். அவர், தனது முயற்சியில் கணிசமான அளவு வெற்றிகளைப் பெறுவதற்கு – இந்தத் தமிழ்க் குழுக்களின் துரோக அரசியல் – உதவுகின்றது.

தமிழரின் தாயக நிலத்தைப் பிரிக்கும் – தமிழரின் தேசிய பலத்தைச சிதைக்கும் சதித்திட்டமொன்றைத் தீட்டவிட்டு. அதற்கு அரசியல் தீர்வுப்பொதி என்று பெயர் சூட்டி, சர்வதேச சமூகத்தை மயக்கும் அம்மையாரின் சூழ்ச்சித் திட்டத்தைப் புகழ்ந்து பாடி பேரினவாதத்திற்கு முண்டுகொடுப்பதன் மூலம் இந்தத் தமிழ்க் குழுக்கள், தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு மாபெரும் துரோகமிளைக்கின்றன.

தமிழரின் தேசிய நலன்களை உதறித்தள்ளிவிட்டு தன்னலனுக்காகவும் – பதவி சுகங்களுக்காகவும் தமிழினத்திற்கு அரசியல் துரோகமிளைப்பதே தமிழ்க்குழுக்களின் அரசியல் வரலாறாகும். இந்த 'வரலாற்றுப் பாத்திரத்தை' ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு குழு தன்வசம் எடுத்துக் கொள்வது தமிழ் மக்கள் சந்திக்கும் வெறுப்புமிகு அனுபவங்களாகும். தமிழினம் ஒரு நெருக்கடியான நிலையில் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் அந்தத் துரோகப் பாத்திரத்தின் தலைமையை ஈ. பி. டி. பியும் – அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் எடுத்துள்ளனர். ○

## வன்னியில் பெருமெருப்பிலான படையெருப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான ஒரு படைநகர்வைச் செய்வதனூடாக –

தான் அடையவேண்டியுள்ள வேறும் சில உடனடி அரசியல், இராணுவ நோக்கங்களை எய்தவும் சந்திரிகா அரசாங்கம் ஆவல் கொண்டுள்ளது.

''றிவிரச'' படையெடுப்பு மூலம் குடாநாட்டைக் கைப்பற்றியதன் பின்பு, இராணுவ ரீதியான எவ்வித முன்னேற்றங்களையும் சிங்களப் படைகளால் நிலைநாட்ட முடியவில்லை.

தாக்கம் மிகுந்த எந்த ஒரு பின்னடைவையும் புலிகளும் சந்திக்கவில்லை.

கிளிநொச்சியைக் கைப்பற்ற நகர்த்தப்பட்ட ''சத்ஜய'' படையெடுப்பு, பெரியதொரு இராணுவ சாதனையாகக் கருதப்படவில்லை; அரசியல் ரீதியாகவோ, அல்லது இராணுவ ரீதியாகவோ எவ்வித நன்மைகளையும் அரசாங்கத்திற்கு அது பயக்கவில்லை.

மாறாக – பாரிய இராணுவ இழப்புகளைக் கொடுத்து, வெறும் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக மட்டுமே முன்னேறி, ஆட்களெவருமற்ற கட்டிடங்களையும், நிலத்தையும் பிடித்துக் கொண்டது தான் மிச்சம்.

இன்னொரு வகையில் – தமது தரப்பில் குறைவான இழப்புகளுடன் எதிரிக்குப் பலத்த சேதத்தை உண்டுபண்ணும் விதத்தில் தந்திரோபாயமாகச் சமராடி விட்டு, வெற்றிகரமாகப் பின்வாங்கிய 'போரியல் கெட்டிககாரர்கள்' என்ற பெயரைப் புலிகளுக்குக் கொடுத்தது ''சத்ஜய''வின் இன்னொரு பெறுபேறு.

முல்லைத்தீவு படைத் தளத்தை வீழ்த்தி, முழுமையாக அழித்து, முல்லைத்தீவு நகரத்தை மீட்டெடுத்த தாக்குதற் சமர், சந்திரிகா–றத்வத்த அரசாங்கம் சந்தித்த அவமானகரமான தோல்வி; புலிகளுக்கு, வரலாற்றுக் கீர்த்திமிகு வெற்றி.

ஒரு புறம் கிளிநொச்சிப் படைத் தளத்தையும், மறுபுறம் ஆனையிறவுப் படைத் தளத்தையும் ஒரே தொடராகக் கொண்ட பரந்தன் – ஆனையிறவுப் படைத் தளத் தொகுதியினுள் துணிகரமாக ஊடுருவித் தாக்கி, எதிரிக்குப் பாரிய போர்த்தளபாட அழிவைக் கொடுத்த புலிகளின் அதிர்ச்சித் தாக்குதல் – சிங்களத் தரப்புச் சந்தித்த இன்னொரு பெரிய இராணுவத் தோல்வியாகும்.

'புலிகளின் கட்டுப்பாட்டுத் தளப்பிராந்தியத்தினுள் படைகளை நீள நகர்த்திச் செல்வது என்பது, ஒரு வெற்றிகரமான மூலோபாயம் தானா?' என்ற யதார்த்த பூர்வமான கேள்வியை இராணுவ ஆய்வாளர்கள் எழுப்ப இவை காரணமாயின.

வட போரரங்கை வென்று, இலங்கைத் தீவில் போர் மூலம் சமாதானம் காணும் அரசியல் அணுகுமுறையோடு புறப்பட்ட சிங்கள அரசு, உலகினை வியப்பிலாழ்த்தி, சிங்களதேசத்தைப் பேருவகையில் திளைக்கச் செய்து, நடைமுறைப்படுத்திச் சென்ற போரியல் மூலோபாயம் சந்தேகத்துக்கிடமானதாக ஆகியது.

இன்னொரு புறத்தே, கிழக்குப் போரரங்கில், புளுகுணாவி வெற்றித் தாக்குதல் உட்பட, இடையறாது தொடரும் அதிரடிகளும், போராட்டச் செயற்பாடுகளும் – அந்த இராணுவ மூலோபாயத்திற்கும், அரசியல் அணுகுமுறைக்கும் கிடைத்த அடுத்த வழிப் பாதிப்பு.

இவ்வாறான தொடர் பின்னடைவுகள் காரணமாக, 'தமிழர்களுக்கு எதிரான போரை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் தலைமை' என்ற சிங்கள மக்களின் நம்பிக்கையை சந்திரிகா – றத்வத்த அரசாங்கம் இழக்கக் கூடிய நிலையே தோன்றியுள்ளது.

போர் செய்வதன் மூலம், புலிகளை அழித்துச் சமாதானம் காணும் மூலோபாயத்தின் விளைவாக, தமது தேசத்தின் வீரர்கள் அநியாயமாகப் பலியிடப்படுகின்றார்கள் என்ற எண்ணமும், தமது தேசத்தின் பொருளாதார நிலை மிக மோசமாகச் சிதைவடையச் செய்யப்படுகின்றது என்ற எண்ணமும் சிங்களக் குடிமக்களுக்குள் மேலோங்கத் தொடங்கியுள்ளன.

இராணுவ ரீதியாகப் புலிகளை ஒடுக்குவதற்கு ஆசிவழங்கிய சர்வதேச சக்திகள் சிலவும், சந்திரிகா அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை இழக்கும் ஆரம்பக்கட்டத்திற்கு வந்துவிட்டன.

இத்தகைய குழப்பகரமான சூழ்நிலையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சரியத் தொடங்கியிருக்கும் தம் ''நற்பெயரை'' தூக்கி நிறுத்துவதற்குப் புலிகள் மீது பாரிய படை நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் பேராதரவு மிக்க அரசாங்கமாகவே தாம் திகழ்வதாக வெளியுலகிற்குக் காட்டுவதற்காக, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வெல்லுவதற்கு வழி சமைக்கத் தீர்மானித்த சந்திரிகா அரசாங்கம், அந்த அரசியல் ஆதாயத்தைப் பெறுவதற்காக –

வன்னியில், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சிறியதொரு நிலப்பகுதியை முடிந்தஅளவுக்குச் சண்டையைத் தவிர்த்து குறைந்த இழப்புகளுடன் கைப்பற்றும் இராணுவ வெற்றியொன்றை ஆரம்பக்கட்டமாக ஈட்டுவதற்கும் தீர்மானித்தது.

இவ்வாறான அரசியல் ரீதியான காரணங்களைத் தவிர, உடனடியாக ஆரம்பித்துத் தொடர்ந்து நிகழ்த்த வேண்டிய ஒரு படையெடுப்பிற்கு போரியல் ரீதியான காரணங்களும் உண்டு. அது, பெரும் மரபு வழிச் சண்டைக் களத்துக்குள் இழுத்துப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்துவதும், அதன் தொடராக, பாரிய அரசியல் – பொருளாதார நெருக்கடிக்குள் புலிகளைத் தள்ளுவதுமாகும். இன்னொரு வகையில் –

யாழ்ப்பாணச் சண்டைகளுக்குப் பிறகு கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தியே முல்லைத் தீவிலும், கிளிநொச்சிச் சண்டைகளுக்குப் பிறகு கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தியே ஆனையிறவிலும் புலிகளால் தாக்கமுடிந்தது என்றுதான் சிங்களப் படைத்துறைத் தலைமை கருதுவதால் –

புலிகள் தம்மைத் தயார்ப்படுத்தக்கூடிய கால அவகாசத்தைக் கொடுக்காமல் இருப்பதற்காகவும், இன்னொரு தாக்குதல் முன்முனைவை எடுக்கவிடாமல் அவர்களைத் தடுப்பதற்காகவும் – ஆறுதலாகச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயற்படவிடாமல் புலிகளைத் தொடர்ச்சியான சண்டைக்குள் வைத்திருக்கக்கூடிய படையெடுப்பை நிகழ்த்தவும் சிங்களத் தலைமை விரும்புகின்றது.

இவ்வாறாக, எது எவ்வாறு இருக்கின்ற போதிலும், அகன்று பரவிப் படைகளை நகர்த்துவது சிங்களத் தரப்புக்கு நடைமுறைச் சாத்தியமற்ற ஒரு காரியமாகவே இருக்கப்போகின்றது.

புலிகளின் போரணிகள், பெருஞ் சமர்க் களத்தைச் சந்திக்கக்கூடிய தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

தொடர் படையெடுப்புத் திட்டத்தின் முதற் கட்டம் வவுனியாவிலிருந்து மன்னார் மாவட்டத்திற்குள் நகர்த்தப்பட்டாலுங்கூட –

வன்னித் தளப் பிராந்தியத்தின் பல்வேறு முனைகளிலும் இன்னும் படையெடுப்பு அரங்குகள் திறக்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகளை எதிர்பார்த்து, எதிரியின் அசைவுகளை அவதானித்த வண்ணம் புலிகளின் படையணிகள் காத்திருக்கின்றன.

ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர் படையெடுப்பு நடவடிக்கைக்கு எதிராகப் புலிகள் நிகழ்த்தவுள்ள தந்திரோபாயம் மிக்க எதிர்ச்சமர் சிங்களப்படைக்குப் பாதக விளைவுகளையே தரப் போகின்றது.

யாழ்ப்பாணச் சமருக்குப் பிறகு, முல்லைத் தீவிலிருந்தும், ஆனையிறவிலிருந்தும், மற்றும் வேறு வழிகளாலும் புலிகள் பெற்றிருக்கின்ற புதிய சுடுசக்திப் பலமும், கணிசமான மனிதவலுப் பலமும் – மரபுமுறைச் சமர்க்களங்களில் ஈடுபடவல்ல திடமான போர்த்திறனை இப்போது புலிகளுக்கு வழங்கியுள்ளன.

'சத்ஜய'விற்கு எதிராகப் புலிகள் வெற்றிகரமாக நிகழ்த்திய நுட்பமான மரபுமுறைச் சமர், அதற்கு ஒரு சிறிய சான்று.

மறுபுறத்தே, ஏற்கெனவே ஒரு தடவை, இவ்வாறாக அகன்று பரவி நிலைகொண்ட இந்திய ஆக்கிரமிப்பை முறியடித்த வரலாற்று அனுபவத்தையும் தமிழீழம் கண்டிருக்கின்றது.

இவ்வாறாக இருக்கின்ற கள நிலவரத்தில் –

ஆரம்பிக்கப்பட்டுவிட்ட படையெடுப்பானது, சிங்களத் தலைமை புரிந்த தற்கொலைக்கு ஒப்பான காரியம் என்றுதான், எதிர்காலத்தில் இதனை இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் எழுதப்போகும் ஆய்வாளர்கள் வரலாற்று ரீதியாகப் பொறிக்கப் போகின்றார்கள். ○


## சிங்கள அரசின் கொள்கை நிலைப்பாட்டின்படி:

# சமாதானத் தீர்வுக்காகப் போர்;

# இராணுவத் தீர்வுக்காகப் பேச்சுவார்த்தை!

### பேச்சுவார்த்தைக்காக, சந்திரிகா அரசு விதிக்கும் முன்நிபந்தனைகள் இரண்டும் ஏற்கமுடியாதவை! ஏன் ?

### பேச்சுவார்த்தைக்கான முன் நிகழ்வாகப் புலிகள் இயக்கம் வலியுறுத்தும் விடயங்கள் சரியானவை! ஏன் ?



தமிழருடனான போருக்கு அம்மையார் இட்ட பெயர் சமாதானத்திற்கான போர்.

அம்மையார் நடாத்தவிரும்பும் அரசியல் பேச்சு வார்த்தைக்கு இராணுவத் தீர்விற்கான பேச்சு வார்த்தை என்று பெயர்சூட்டுவது சிறந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்காக, அவர் விதித்துள்ள முன்நிபந்தனைகளான ஆயுதச்சரணடைவும் - பேச்சுக்கான குறுகியகால எல்லை விதிப்பும் இராணுவத் தீர்விற்கான நடைமுறைகளே அன்றிவேறொன்றும் அல்ல

சந்திரிகா அம்மையாரின் திமிர்த்தனமான இந்த இராணுவ சிந்தனையை உலகிற்குப் புலப்படுத்தும் வகையில் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரை அமைந்திருந்தது. சந்திரிகா அரசின் இராணுவவாதப் போக்கையும் – பேரினவாத நிலைப்பாட்டையும், அந்த உரையில், தலைவர் அவர்கள், சர்வதேச சமூகத்திற்கு விளக்கிக் கூறியுள்ளார்.

அதேவேளை 'சமாதானம்' ' அரசியல்தீர்வு, என்று சந்திரிகா அம்மையார் பேச்சளவில் மட்டும் பயன்படுத்தி வரும் அரசியல் வார்த்தைகளுக்கு நடைமுறை வடிவம் கொடுக்கும் நீதியான – சமத்துவமான–வழிவகைகள் பற்றி, தலைவர் அந்த உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக, அரசு விதித்துள்ள நிபந்தனைகளைப் பார்க்கும்போது ஒரு உண்மை வெளிப்படுகின்றது. அமைதிவழி மூலம் ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கு, அரசாங்கம் தயாராக இல்லை என்பதே அதுவாகும்.

ஆயுதச் சரணடைவைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டாது. தலைவர் கூறியுள்ளது போல '' தன்மானமுள்ள எந்த ஒரு விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப்பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை''. அத்துடன், இந்த முன் நிபந்தனையை உலகசமூகம் ஆதரித்துக் குரல் கொடுக்கவும் மாட்டாது.

சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வை வழங்குவதைவிட புலிகளின் ஆயுதங்களை நயவஞ்சகமாகப் பறித்தெடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக உள்ளது. ஏனெனில், தமிழர் தேசியத்தின் பாதுகாப்புக் கவசமாகவும், தமிழ் இனத்தின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு அடிப்படைக்காரணியாகவும் விளங்கும், புலிகளின் இராணுவ பலத்தை எப்படியாவது சிதைத்துவிட்டால், அரசியல் தீர்விற்கான தேவையும் இல்லாமல்போகும், தமிழரின் ஆயுதப் போராட்டத்தை நசுக்கிவிடவும் முடியும் என்பது பேரினவாதிகளின் கணிப்பு. இந்தவகையில், ஆயுதங்களைப் புலிகள் சரணடைவு செய்யவேண்டும் என்ற அரசின் நிலைப்பாடு சமாதானத்திற்கான நிபந்தனை அல்ல; தமிழினத்தின் அழிவுக்கான முன் நிபந்தனையே அதுவாகும்.

இதே போன்றுதான், பேச்சுவார்த்தைக்கு குறுகிய காலஎல்லை விதிப்பது என்ற, அம்மையாரின் அடுத்த நிபந்தனையும் யதார்த்தத்திற்குப் பொருந்தாதது. அதேவேளை, வரலாற்றையும் அது நிராகரிக்கின்றது.

24 வருடம் இரத்தம் தோய்ந்த போர் வரலாற்றையும், 50 ஆண்டுகால அரச ஒடுக்குமுறை வரலாற்றையும் பலநூற்றாண்டுகால பகைமை வரலாற்றையும் தன்னகத்தே கொண்ட சிக்கலான, தமிழ் – சிங்கள இனப்பிரச்சினையைக்கோழிமுட்டையைகுஞ்சு பொரிப்பதுபோல, மிகக்குறுகிய காலத்தில் பேசித்தீர்க்கக் காலக்கெடுவிதிப்பது சரியான அணுகுமுறை அல்ல. இது ஒரு சர்வாதிகாரச் சிந்தனை. ஜனநாயக விரோத நிபந்தனை.

முடிந்தளவுக்கு விரைவாக இனப்பிரச்சினையைப் பேசித்தீர்க்க வேண்டும் என்பதுதான் புலிகளின் விருப்பம். தமிழ் மக்களின் ஆசையும் – எதிர்பார்ப்பும் – அதுதான். ஆனால், சிங்கள அரசு காட்ட விரும்பும் கடுகதி வேகம் நல்ல நோக்கம் கொண்டது அல்ல. மாறாக, சிங்கள அரசின் அரசியல் கொள்கையாகிய இராணுவத் தீர்வைத் தாமதமில்லாமல் தொடர்வதற்கு ஏதுவாக, பேச்சுவார்த்தையை வேகமாக முடிக்க வேண்டும் என்ற இராணுவ நோக்கமே அரசு காட்ட விரும்பும் கடுகதி வேகத்திற்கு காரணமாகும்.

சிங்கள அரசு நியமித்த பாராளுமன்றத் தெரிவுக்குழு வருடக்கணக்காகக் கூடிப்பேசியும் ஒரு தீர்வுத்திட்டத்தை அதனால் இன்று வரை வரையமுடியவில்லை. அதுபோல, சந்திரிகா அரசின் தீர்வுப் பொதிநகலை முழுமைப்படுத்தும் நோக்குடன் நடாத்தப்படும் கலந்துரையாடல்களும் – கருத்துப்பரிமாற்றங்களும் – ஏறக்குறைய ஒரு வருடமாக முடிவுகாணாது தொடர்கின்றன. சிங்கள – தமிழ் மக்கள் மீதான இராணுவ அட்டூழியங்கள், மர்மக் கொலைச் சம்பவங்களை விசாரிக்கவென, அரசாங்கம் பல விசாரணைக் கமிசன்களை அமைத்ததுவே! மாதங்கள் பல கடந்தும் அதில் ஏதாவது ஒன்று தன்னும் விசாரணையை முடித்துள்ளதா!

உண்மை நிலைமை இப்படியிருக்கப் புலிகள் இயக்கத்துடனான அரசியல் பேச்சுவார்த்தையை மட்டும் மிகக்குறுகிய காலத்தில் முடித்துவிட வேண்டும் என்று முன் நிபந்தனை விதிப்பதற்கு என்ன காரணம்?

'பேச்சுவார்த்தைக் காலங்களைத் தமது இராணுவ பலத்தை அதிகரிக்கப்பயன்படுத்தும் இடைவெளியாகப் புலிகள் இயக்கம் பாவிப்பது வழமை. எனவேதான் ஒரு கால எல்லையை பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளுள் ஒன்றாக விதிக்கின்றோம், என அரச தரப்பில் காரணம் கூறப்படுகின்றது.

இது பொய்யான காரணம்; பொருந்தாத வாதம்.

வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதன் மூலமே புலிகள் தமது இராணுவ பலத்தை அதிகரித்துக் கொள்கின்றனர் என்றும், அதை சமாதான காலத்தில் வட கிழக்கிற்கு கடத்தி வருகின்றனர் என்றும் பொய்யான கற்பிதங்கள் மூலம், பேச்சுவார்த்தைக்கான இந்த நிபந்தனைக்கு நியாயம் கூற அரசு எத்தனிக்கின்றது.

ஒரு சில நவீன ஆயுதங்களை வெளிநாட்டுச் சந்தைகளில் இருந்து புலிகள் இயக்கம் கொள்வனவு செய்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், சிங்களப் படையிடமிருந்து கைப்பற்றப்படும் ஆயுத தளபாடங்கள் மூலமே, பெரும்பாலும் புலிகள் இயக்கம் தனது படைபலத்தை வளர்த்துக் கொள்கின்றது. 'தவளை'க் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட டாங்கி மற்றும் சக்திவாய்ந்த நீருந்து விசைப்படகுகளைக் கொண்டும், ஓயாத அலைகள், புனகுணாவ தாக்குதல்கள் மூலம் ஆர்ல்லறி ஏவு கருவிகள் உட்பட பெருந்தொகைப் படைக்கலங்களை புலிகள் கைப்பற்றியும், தமது இராணுவபலத்தை உயர்த்தி வருவதை – உதாரணத்திற்காக – இங்கே சுட்டிக்காட்டமுடியும்.

எனவே, போர்க்காலங்களிலேயே புலிகள் இயக்கம், தனது இராணுவ பலத்தை பெருக்கிக்கொள்கின்றது. அரசு கூறமுற்படுவதுபோல சமாதான காலத்தில் அல்ல. அரச படையிடமிருந்து அடித்துப் பறிக்கப்படும் ஆயுத தளபாடங்கள் தான் புலிகளின் படைவலுப் பெருக்கத்திற்கு பிரதான காரணம். அரசு கூற விரும்புவதுபோல வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்படும் படைக்கலங்கள் மூலம் அல்ல.

இந்த உண்மை எமது மக்களுக்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கும், ஏன், சிங்கள அரசிற்கும் நன்கு தெரியும்.

இந்த வகையில், பேச்சுவார்த்தைக்கு குறுகியகால எல்லை விதிப்பது என்ற தனது நிலைப்பாட்டிற்கு, அரசு அளித்த விளக்கம் பொய்யானது என நிரூபணமாகின்றது. உலகை ஏமாற்றுவதற்குப் போட்டுக்கொண்ட சமாதான வேடத்தால் தனது போர் முயற்சி தடைப்பட்டுவிடக்கூடாது என்ற அம்மையாரின் இராணுவசிந்தனை தான் மேற்குறித்த நிபந்தனைக்குக் காரணமேயல்லாது வேறொன்றும் அல்ல.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான புறச் சூழலை ஏற்படுத்தும்முகமாக சிலமுன் நிகழ்வுகள் இடம்பெறுவது அவசியம் என்று தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நேர்மையான வகையில் பேச்சுவார்த்தை நடைபெற்று நியாயமான தீர்வுத்திட்டம் ஒன்று வரையப்படுவதற்கு ஏதுவாக, தமிழர் நிலத்தில் இயல்புநிலை தோன்ற வேண்டியது அவசியம். அப்போது தான் நடுநிலையுடன் பேச்சுக்கள் தொடரும். பரஸ்பரசந்தேகங்கள் அகன்று பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் உறுதிப்பாடு பிறக்க வழியேற்படும்.

இராணுவ ஆட்சியில் தமிழ்மக்கள் அல்லலுறும்போது. பொருளாதாரத்தடைகள் மற்றும் ஆக்கிரமிப்பு அழுத்தங்கள் கொடுக்கும் பல்வேறுவிதமான வாழ்க்கைச் சுமைகளால் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்போது, பேச்சுவார்த்தை மேசையில் நல்லெண்ணம் நிலவாது வெறுப்பும், சந்தேகமும், பழிவாங்கும் உணர்வும் தான் நிழலாடும்.

எனவேதான், பேச்சுவார்த்தைக்கு முன்நிகழ்வாக தமிழர் நிலத்தில் இயல்புநிலை ஏற்படுத்தப்படல் அவசியம் என்று தலைவர் பிரபாகரன்– வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் இருந்து படைகளை விலக்கி, பொருளாதாரத்தடை போன்ற அழுத்தங்களை நீக்குவதன்மூலம் நெருக்கடியைத் தணித்து, சுமூகமான இயல்புநிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்று, தலைவர் வலியுறுத்தியிருக்கிறார்.

புலிகள் இயக்கத்தின் இந்த அரசியல் நிலைப்பாட்டை சந்திரிகா அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்க இயலாது. ஏனெனில், போர்மூலம் சமாதானம் காணப்புறப்பட்ட அம்மையாருக்கு பேச்சுவார்த்தைமூலம் சமாதானம் காணும் எண்ணம் எழ வாய்ப்பில்லை.

பேச்சுமூலம் சமாதானம் காண முயன்றால் தமிழரின் அரசியல் உரிமைகளை முழுமையாக வழங்க வேண்டி வந்துவிடும். இதை சிங்கள அரசு ஒருபோதும் விரும்பாது. எனவேதான், போர்மூலம் தமிழினத்தைத் தோற்கடித்து – அதன்

பின் சமாதானப்பேச்சு என்ற போர்வையில் – சரணாகதி ஒப்பந்தத்தை தமிழினத்தின்மீது, திணிப்பதே சந்திரிகா அரசாங்கத்தின் திட்டம். அதாவது, இராணுவ மேலாதிக்கத்துடன் இருந்தபடி இனப்பிரச்சினைபற்றிப் பேசவே சிங்கள அரசு விரும்புகின்றது. அப்போதுதான் குறைந்தபட்சத்தீர்வை தமிழர்மீது திணிக்கமுடியும் என்று அது எண்ணுகின்றது. இவ்விதமான ஒரு இராணுவத்தீர்வே சிங்கள அரசாங்கத்தின் நிரந்தரக் கொள்கையாகும்.

இதேவேளை, பேச்சுவார்த்தைக்கான மூன்நிகழ்வாக புலிகள் இயக்கம் எடுத்துள்ள நிலைப்பாடு கடுமையானதாக இருக்கின்றது என்ற கருத்தும் சிலரிடம் உண்டு. ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து இராணுவம் விலக்கிக்கொள்ளப்படவேண்டும் என்ற அரசியல் நிலைப்பாட்டையே சிலர், இவ்விதம் கேள்விக் குறியுடன் நோக்குகின்றனர்.

புலிகளின் இந்த நிலைப்பாடு சரியானதே. அதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை, தமிழரின் இனப்பிரச்சினைக்கு நீதியான, கௌரவமான தீர்வொன்று பேச்சுமூலம் காணப்படவேண்டுமாயின், இந்தமுன்நிகழ்வுகள் அவசியமானவை. சமாதான தேவதையாகவும் – அரசியல்தீர்வில் நாட்டம் கொண்ட ஒரு ஜனநாயக வாதிபோலவும், நடந்துகொள்ளும் சந்திரிகா அம்மையாரை சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்தவும் இந்த முன் நிகழ்வுகள் உதவும்

பேச்சுவார்த்தையை நேர்மையுடனும் – உண்மையுடனும் நடாத்த வேண்டும் என்று சந்திரிகா அரசாங்கம் மனப்பூர்வமாக விரும்பினால், தலைவர் பிரபாகரன், வலியுறுத்தியுள்ள இந்த முன்நிகழ்வுகளை ஏற்றுக்கொள்வதில் அவருக்கு எந்தத் தடையும் இருக்காது. சிங்கள அரசாங்கத்திற்கு அது எந்த நட்டத்தையும் ஏற்படுத்திவிடாது. ஆனால் பேச்சுவார்த்தையை ஒரு அரசியல் நாடகமாக–சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு கண்துடைப்பாக நடாத்த விரும்பினால் படைவிலக்கல் சிங்கள அரசாங்கத்திற்கு நட்டத்தைக் கொடுக்கும். மேலும், போரை நிறுத்தி தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வை உண்மையிலேயே அம்மையார் நாடுகின்றாரா? அல்லது போரைத் தொடர்ந்து நடாத்தி இராணுவத் தீர்வொன்றை தமிழினத்தின் மீது திணிப்பதையே தனது அரசியல் திட்டமாகக் கொண்டுள்ளாரா? என்பதை உலகம் கண்டறிய, புலிகளின் நிலைப்பாடு, நிச்சயம்உதவும்.

இந்த அரசியல் நிலைப்பாட்டால் தமிழினத்திற்கு எந்த ஒரு நட்டமும் வந்து விடாது இதை சிங்கள அரசு ஏற்றுக் கொண்டால் அது தமிழினததிற்கு நன்மை பல பயக்கும். ஏற்க அரசு மறுத்தால், புதிதாக, எந்த ஒரு நட்டமும் தமிழ் மக்களுக்கு ஏற்படாது.

எனவே, தலைவர் பிரபாகரன் வலியுறுத்திய அரசியல் நிலைப்பாட்டில் கடுமை இல்லை. மாறாக, உறுதியும் – சாணக்கியமும் – தமிழர் நலனும் தான் உண்டு.

ஆயுதச் சரணடைவு – பேச்சுக்கு காலஎல்லை விதிப்பு ஆகிய அரசின், முன்நிபந்தனைகள் தமிழர் நலனுக்கு தீங்கிளைக்கக் கூடியவை. ஆனால், தலைவர் பிரபாகரன் வலியுறுத்திய முன்நிகழ்வுகள் தமிழர் நலன்களை உறுதிப்படுத்துபவை சரியானவை.

இதேவேளை, புலிகள் இயக்கத்தின் யோசனைகள் உலக இராஜதந்திரிகளது கவனத்தையும் ஈர்த்துள்ளன, இதனால்தான் புலிகளின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்கு மத்தியத்துவம் வகிக்கத் தயார் எனப் பல மேற்குநாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

சிங்கள அரசுடனான சமாதானப் பேச்சுக்கு வெளிநாட்டு மத்தியத்துவம் அவசியம் தேவை என்ற நிலை முன்னரே எழுந்து விட்டது சந்திரிகா அரசாங்கத்துடனான முன்னைய பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தபின், இனிமேல், மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்துடன் இடம் பெறும் பேச்சுக்கள்தான் பயன்தரும் என்று முன்னரே புலிகள் தெரிவித்து விட்டனர். இம்முறை மாவீரர் நாள் உரையிலும்– தலைவர் பிரபாகரன் – அதைநினைவூட்டியுள்ளார்.

சமாதானப் பேச்சிலும் – அரசியல் தீர்வு முயற்சியிலும், புலிகள் காட்டும் நேர்மையான விருப்பத்தையே வெளிநாட்டு மத்தியத்துவத்திற்கான புலிகளின் அழைப்பு புலப்படுத்துகின்றது. அதேவேளை சமாதானப் பேச்சை நிராகரிப்பவர்கள் என்று புலிகளுக்கு எதிராக – சிங்கள அரசு – சுமத்தும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களையும் இது அர்த்தமற்றதாக்கும். அத்துடன், சிங்கள அரசின் சமாதான விரோதச் செயற்பாடுகளையும் – இராணுவ வாதப் போக்கையும் உலகம் தெரிந்து கொள்ள இது வழிசமைத்துக் கொடுக்கும்.

சந்திரிகா அம்மையார் தொடர்பாக உலக சமூகம் முன்பு, வைத்திருந்த கணிப்பில், இப்போது, பெரும் மாறுதல்கள் நிகழத் தொடங்கியுள்ளன.

யாழ் ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் அம்மையார் வெளிப்படுத்திவரும் பேரினவாத செய்கைகளும் – பேச்சுக்களும்; ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களில் நடைபெறும் இராணுவ அட்டூழியங்களும் உருப்படியான அரசியல்தீர்வொன்றை இதுவரை காணாத நிலையும், போர் மீறும் – இராணுவ வழிமுறைகளிலும் அவர் காட்டும் மறைமுக ப்ரியமும் உலகசமூகத்திற்கு அதிர்ச்சியையும் – ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளன. இவை காரணமாக, அம்மையாருக்கு இருந்த சமாதான தேவதைத் தோற்றம் உலக அரங்கில் மங்கத்தொடங்கி விட்டது. போரை முடிவுக்குக் கொண்டு வந்து – பேச்சுமூலம் இனப்பிரச்சனையை விரைவாகத் தீர்த்து வைக்கும்படி சர்வதேச அழுத்தம், அம்மையாரை நெருக்குகின்றது. அண்மையில் பாரிஸ், நகரில் நடந்த உதவிவழங்கும் நாடுகளின் ஒன்றியத்தினது கூட்டத்திலும் அம்மையாருக்கு நேரடியாகவே நிர்ப்பந்தம் கொடுக்கப்பட்டது. உதவிகளிலும் வெட்டுவிழும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

போர்ச்செலவால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் சிங்களப் பொருண்மியத்திற்கு – வெளிநாட்டு உதவிகளும் தடைப்படுமாயின் – போர்இயந்திரம் பெரிதும் பாதிக்கப்படும். இதனால் அம்மையாரின் போர்முயற்சி பெரிதும் தடைப்படும். இத்தகைய புறசூழலில்தான் பேச்சுவார்த்தைக்குரிய அறிவிப்பையும்– வெளிநாட்டு மத்தியத்துவததிற்கான அழைப்பையும், அம்மையாரின் அரசாங்கம், வெளியிட்டது. ஆயினும், பேச்சுவார்த்தைமூலம் இனப்பிரச்சினையைத்தீர்க்க அம்மையார் விரும்பவில்லை அவரது பேச்சுவார்த்தையை புலிகள் இயக்கத்தைக் கொண்டு நிராகரிப்பிக்கச் செய்வதற்காகவே கடுமையான நிபந்தனைகளை அவர் விதித்துள்ளார். எனினும், மாவீரர்நாள் உரையில், இந்தநிபந்தனைகளின் ஏற்கமுடியாத தன்மைகள் பற்றி விளக்கிய – தலைவர் பிரபாகரன் அவர்கள் – சமாதானச் சூழலை ஏற்படுத்தத் தேவையான மூன் நிகழ்வுகள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார் இருபக்க நிலைப்பாட்டையும் உலகம் இப்போது அவதானித்துவருகின்றது.

சந்திரிகாவின் சமாதானவேடம் கலையும் நாளும் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கான நியாயத்தை உலகம் புரிந்துகொள்ளும் நாளும் வெகுதூரத்தில் இல்லை. ○



## சிங்கம் அல்லது சிங்கங்களின் கதை

பற்றி எரியும் கூந்தல் !
அது கருகும் நெடி அறியாது
வாளேந்திய பெண்சிங்கம்
கிழிந்த தாடைகளை அசைத்து
கர்ஜனை செய்தது !
பூண்டோடு அழிப்பேன் !
பூண்டோடு அழிப்பேன் ! !

சிங்கம் அழிக்க நினைத்தது
இன்று வரை
அதன் கைகளுக்கு அகப்படவேயில்லை.
ஆனால் அதைப் போன்றவற்றையெல்லாம்
ஏந்திய வாளின் மகிமையைக் காக்க
அழித்துக் கொண்டும்
அவற்றின் எல்லாவற்றையும்
விழுங்கிக் கொண்டுமிருந்தது

'' ஒலிவ் '' தளிர்கள்
சிங்கத்தின் பற்களிடை அரையுண்டு அழிவுற்றன.
இடையிடையே
அழிவுற்ற 'ஒலிவ்' தளிர்களை
சிங்கம் இரைமீட்டு அசைபோட்டது.
கூடவே
'ஒலிவ்' தளிரின் மகத்துவம் பற்றியும்
அதன் சீவியம் நிலைக்க வேண்டுமென்றும்
அது கர்ஜித்தது.

சிங்கத்தின் வாளேந்திய கை
ஓயாத ஊழியில்
கடித்துக் குதறுண்டது
கூர்மழுங்கிய வாளை
மறு கையில் தாங்கி
உலகின் கூரையில் ஏறிநின்று
நடுங்கும் குரலில் அது கர்ஜித்தது
''எஞ்சியிருப்பது கொஞ்சமே
அவற்றையும் பஞ்சாய் பொசுக்குவேன்''
உண்மையில் அதற்கு ஒன்றுமே புரியவில்லை.
அழித்தலா ? அழிதலா ?
சிங்கம் மூக்கை நுழைக்கும் இடமெல்லாம்
அதன் மூக்கு
மூர்க்கமாக நொருக்கப்பட்டது !
அது அடிவைக்கும் நிலமெல்லாம்
இட்ட அடிசிதற இடி முளைத்தது !

சிங்கம் வாளேந்தும் போது
அணிந்திருந்த வெண்துகில் நிறமிழந்திருந்தது.
திட்டுத திட்டாய் குருதி உறைந்தும்
தீய்ந்து கருகியுமிருந்தது.
கடித்துக் குதறிய கையும்
நொருங்கிய மூக்குமாக
கழுத்தில் குருதிக் கலயம் தாங்கி
கூரிழந்த வாளேந்தி
தெருத் தெருவாய் அது கர்ஜித்தது.
''குருதி வேண்டும்''
''கூர்மிகுவாட்களும் வேண்டும்''
பயப் பிராந்தியில் கொடூரமாய் ஒலித்து
காற்றில் அலைந்தழிந்த அதன் கர்ஜனையை
யாரும் செவி மடுத்ததாயும் தெரியவில்லை !

சிங்கம் கர்ஜிப்பதை நிறுத்தவேயில்லை !
வாளேந்தியிருக்கும் வரை
அது கர்ஜிக்க வேண்டியிருக்கிறது.
சுருதி மெலிந்து
அது கர்ஜித்துக் கொண்டிருக்கிறது.
அழிப்பேன் என்று ! அழிவிடை தோய்ந்து ...

எஸ். உமாஜிப்ரான் ○

# பூவரசம்வேலி பொறுக்காது பனைவடலிகள் பணியாது

## உலைக்களம்

– வியாசன்

ஆறுமணியுடன் அடங்கிப்போவென
அதட்டுகிறது அரசகட்டளை.

ஏனென்று கேட்க எவருமிலர்.

கரப்புக்கூட்டுக் குஞ்சுகளென
திறந்துவிட்டதும் தீனிபொறுக்கி,
உள்ளே போ என்றதும் ஒடியடங்கி,
அடிமைத் தனத்தை அறிந்துகொண்டோம்.

எல்லையிடப்பட்ட மண்ணரணுக்குள்ளே
ஒரு வாழ்வமைத்து
எரிந்து கொண்டிருக்கின்றோம்.

மரம்கூடக்கையசைத்து மகிழ்கிறது.

சிரம்தாழ்த்திக் கிடக்கின்றோம் நாம்.

ஒவ்வொரு ''சென்றி''யையும் தாண்டும்போதும்
நீங்கள் எமக்கு அடிமைகளென
''காக்கிப்பார்வைகள்'' கத்துகின்றன.

ஆமாம் எனத்தலையாட்டி நடக்கின்றோம் மௌனமாய்.

இதற்குமேலும் இழிவில்லை யென்பதை
உணர்கின்றோம் உள்ளே.

வாய்திறக்க முடியாத வதை.

நெருப்பாய் தகிக்கிறது நெஞ்சு.



கோபம் கொப்பளிக்கிறது.

என்ன செய்ய இயலும்?

பொறிக்குள் அகப்பட்ட பூனைக்குட்டியாய்
கழிகிறது எம்நாட்கள்.

இயல்புவாழ்வு திரும்பியதாய்
''ரூபவாஹினி'' அலறுகிறது.

மீட்கப்பட்ட மக்களென எம்முகங்களைக் காட்டுகிறது.

இல்லை , வெறும்பம்மாத்து..., சுத்தப்பொய்,
கத்தவேண்டும்போல கோபம் வரும்.

கத்தலாம்

காணாமற்போனோர் பட்டியலில் பெயர்வரும்;
உயிர் வராது.

நள்ளிரவில் கதவு தட்டப்படும்.

திறந்தால் பிடித்துச் செல்லப்படுவோம்;
திறக்காது விட்டால் அடித்துக் கொல்லப்படுவோம்.

பள்ளிக்குப் போர்வாரெம் தங்கைகள்.

ஒவ்வொரு சென்றியிலும்
கண்களாலேயே கற்பழிக்கப்படுவர்.

பையைத் திறவென்பான்
துப்பாக்கி ஏந்திய சனியன் ஒருவன்.

கையைக் காட்டென்பான் இன்னொரு தாத்தேறி.

''அச்சாப் பொண்ணு
ஆதரே மினிசு'' என்று
பாட்டுப் பாடுவான் இன்னொரு பரதேசி.

தினமும் தீக்குளித்தபடி சென்று திரும்புவார்கள்.

''ஏய் புலியைக் கண்டது...
சரிதாங் .. பொய் சொல்லக் கூடாதிங்''... என்றபடி
சுடுகுழலால் நெஞ்சினில் இடிப்பான்.

சந்திகள் யாவிலும் இது சடங்காகிப்போனது.

அதிகாலை புலராப் பொழுதில்
உயிரை ஏறிமிதிக்கும் சப்பாத்துச்சத்தம் கேட்கும்.

நெஞ்சுக்கூடு உலர்ந்துவிடும்.

சுற்றிவளைக்கப்பட்டு
''மீட்பர்களால்'' மிதிக்கப்படுவோம்.

காவலரண்களாலும்
கம்பிச் சுருள்களாலும் பின்னப்பட்டு
மிதிக்கப்படுகிறது எம்மண்.

வலைக்குள் அகப்பட்ட மீனைப்போல ..
துடிக்கிறது எம் ஊர்கள்.

மூத்திரம் பெய்யவும் மூன்னனுமதி பெறுவதெனில்
ஆத்திரம் வராமல் என்ன செய்யும்.

மீளப் புனரமைப்பு என்று கொழும்பு செல்லும்;
உதவி வழங்கும் நாடுகளும் ஒப்புக்கொள்ளும்.

சிறையிருக்கின்றோம் என்பது தெரியாது அவர்களுக்கு.

முகிலுக்குள்ளே நிலவு விழுந்து கிடக்கிறது.
இருட்திரைக்குள்ளே எம் இருப்பு,

தேவாரம் கேட்ட திருத்தலங்களிற் கூட
சாராய வாடை.

எம் மனக்கோட்டைகள் யாவும் எரிந்துபோக
இப்போ அம்மணமாக நிற்பதை அறிகின்றோம்.

விதியெழுதிய தீர்ப்பென பேசாமற்கிடக்கவும்
விடுதலை வேட்கை விடவில்லை.

குயீல்கள் பாடும் வசந்தத்தை இழந்து
எம் குடியிருப்புக்கள் தவிக்கின்றன.

புயலுக்கு முந்திய அமைதியென
எம் பொழுதுகள் கழிகின்றன.

எனினும் –

''தேவகுமாரர்கள்'' வருவாரெனும் நம்பிக்கையே
மடிநிறைந்துள்ளது.

எம்பிள்ளைகள் வருவர்.
சப்பாத்துக் கால்களால் மிதிபடும் தெருக்களில்
மீண்டும் ''வரிச்சீருடை' யில் உலாவருவர்.

இந்த மண்ணரணும்,
கம்பிச் சுருள்களும்,
சென்றிகளும் என்னசெய்யும் அவர்களை ?
பிள்ளைகளின் மூச்சுப்பட்டே பொசுங்கிப்போகும்.

''பஞ்சகல்யாணிக் குதிரை''யேறி
காற்றாய் விரைந்தெம் தெருவிலிறங்குவர்.

எம்மண்ணின் தலைவன் வன்னியிலிருந்து வருவான்.

படைநடத்தியபடி அவன் வரும் தேர்
நகர் புகும் போது
பகைவர் எந்தப் பக்கமாய் ஓடுவர் ?

ஓடுவதா ? அதுதான் இல்லை.

ஒருவர்கூட எஞ்சாது துடைத்தழிக்கப்படுவர்.

நடக்காமற்போகுமா இது ?
நிச்சயம் நடக்கும் இந்தவரலாற்று வெற்றி.

சுயத்தை அழித்து.
எம்மண்ணைச் சுடுகாடாக்கி
பயத்தின் பிடிக்குள்ளெம்மை இறுக்கவா நினைத்தாய்?

பகையே! கொஞ்சநாள் ஆடு.

ஆடி முடி.
பூவரசம் வேலி பொறுக்காது.
செம்பாட்டு மண்ணுக்குள் செருக்குப் பிடிக்காது.
பனைவடலிகள் பணியாதென்பது
நீ அறியாததா ?

சும்மா வாசத்துக்காக பூத்துவிழும் மலர்களல்ல எம்பூக்கள்.
வாசமில்லாவிடினும் ரோசம் மிக்கவை
எமது செவ்வரத்தைகள் என்பதறிவாய் விரைவில்.

தப்புக்கணக்குப் போட்டுள்ளாய் சந்திரிகா !

எத்தனை நாள் வைத்திருப்பாய் எம்மண்ணை ?

ரத்தத்தால் எழுதும் யுத்தக்கணக்கை
ரத்வத்தையா எழுதுகின்றார் ?

ஹொந்தாய்.

வீடுகொளுத்தும் ராணிக்கு –
நெருப்பெடுத்துக் கொடுக்கும் மந்திரி

மாமனுக்கும், மருமகளுக்கும் அச்சாப்பொருத்தம்.

ஒன்று செய்யுங்கள்

போட்டுமூட பொருத்தமான இடத்தில்
குடாநாட்டினுள் குழிந்தாண்டுங்கள்

யாரை மூட?

உங்கள் படையினரை மூட.

*''ஒருநாள் விடியும் இருளும் முடியும்
உதயம் தெரியும் பொழுதிலே – அந்தத்
திருநாளிங்கே வரும்போதினிலே
வருவோம், வருவோம் மகிழ்விலே''* ○

# 'புளுகுணாவி' அதிரடி;

# கிழக்குப் போரரங்கின் சாதனை

"புளுகுணாவி" என்ற எம்மூரைப் "புலுக்குனாவ" என்றாக்கிச் சிங்களம் அபகரித்த கதை பழையது; இரண்டு தசாப்தங்களுக்கு முந்தியது. யூலியஸ் றிச்சாட் ஜெயவர்த்தன என்ற, சிங்களத்தின் முதுபெரும் பேரினவாதி, தான் ஆட்சியில் அமர்ந்த போது அரங்கேற்றிச் சென்ற நிலப்பறிப்பிற்குள் – வியர்வையாய் குருதி சிந்திச் செழிப்பாக்கி – தமிழன் வனப்போடு வாழ்ந்த அந்த விவசாயக்கிராமம் சிக்கிக்கொண்டது. பூர்வீகத் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்; புதிதாகக் கொண்டு வரப்பட்டுச் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். அது ஆக்கிரமிப்புக் குடியேற்றம். ஆனாலும் –

கால அசைவில், புலிகள் முன்நெடுத்துச் சென்ற ஆயுதப் போராட்டத்தின் பெறுபேறாக மட்டும், சிங்களக் குடியேற்றவாசிகள் அப்புறப் படுத்தப்பட்ட தென் தமிழீழத்தின் அநேக தமிழூர்களின் வரிசையில் புளுகுணாவி – தாளையடிமடுப் பிரதேசமும் விடுவிக்கப்பட்டது. இருந்த போதும் – மீண்டும் எம் மக்கள் அங்கு குடியேற முடியாமல், தடையாகக் குந்தியிருந்தது அந்தப் படைமுகாம்.

அதுவரை வனக்காப்புத் துறையின் செயலகமாயிருந்த கட்டிடத்தை 1977 இற்குப் பின்பு சிங்களக் காவற்துறை நிலையமாக்கியது ஜெயவர்தன அரசாங்கம். 83 இல், தமிழீழப் போர் முனைப்படைந்ததையடுத்து, தரைப்படையினர் மாற்றப்பட்டு அது இராணுவ முகாம் ஆக்கப்பட்டது. 86 இன் பிற்காலத்தில், தென்தமிழீழ மக்களுக்கு உயிர் கலங்க வைக்கும் இராட்சதர்களாக விளங்கிய "பொலிஸ் கொமேண்டோ"க்களின் தளமாகி "விசேட அதிரடிப்படை – S.T.F–" முகாம் என்ற மறுவடிவத்தை எடுத்தது.

புலிகளைத் தோற்கடிப்பதற்கான யுத்த முறைக்கெனத் தனித்துவமாகப் பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படையினரின் அந்த தளத்திற்கு, சிங்களக் குடியேற்றக்காரர்களுக்குப் பாதுகாப்பளிப்பது உப பணியாகவே கொடுக்கப்பட்டிருந்தது; மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களின் எல்லையில், தாக்கம்மிகுந்த போரியற் கேந்திரத்தில் நிறுவப்பட்டிருந்ததன் மூலம், கிழக்குப் போரரங்கில் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை அந்தத் தளம் ஆற்றிக்கொண்டிருந்தது. வட புறத்தே பரந்திருந்த புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை இலக்கு வைக்கக்கூடிதாக 'ஆரில்லறி' ( Artillery ) றெஜிமென்டின் பிரிவு ஒன்று மிக மிக அண்மைக் காலத்தில் அங்கு இணைக்கப்பட்டிருந்தது என்பதுவே, அந்தத் தளத்தின் முக்கியத்துவத்தை அறியத்தரப் போதுமானதாகும்.

Special Task Force–STF– எனப்படும் "சிறப்பு அதிரடிப் படை"யின் தோற்றமும், வளர்ச்சியும் அது படைத்த சாதனைகளும் உலகறிந்த இரகசியம். பொலிஸ் துறையில் தேர்ந்தெடுத்த சண்டைக் காரர்களை ஒருங்கிணைத்து, இஸ்றெலிய சிறப்புப் பிரிவினரால் பயிற்றுவித்து, பிரித்தானிய, பாகிஸ்தானிய, இஸ்றெலியப் போரியல் வித்தகர்களால் தயார்செய்யப்பட்ட அதிகாரிகளைத் தளபதிகளாக நியமித்து, 'வியட்கொங்' போராளிகளுக்கு எதிரான வனப்புற யுத்த முனைகளில் சுலபமாகக் கையாண்டு பயன்படுத்தவென 'M. 16' வகையில் உருமாற்றம் செய்து – நீளம் நறுக்கி, பாரம் குறுக்கி – அமெரிக்கா தயாரித்த 'COLT' வகைத் துப்பாக்கிகளைத் தருவித்து வழங்கி, தனது புத்திரன் றவியையே பொறுப்பாக நியமித்து, "தமிழ் பயங்கரவாதத்தின்" போரிடும் வல்லமையை முறியடித்து முழுமையாக அழிப்பதையே இலட்சியமாக வரித்து, ஜெயவர்தன உருவாக்கிய படை அது. தன்னாட்டு ஜனாதிபதிகளின் மெய்க்காப்புப் படையாகப் பணியாற்றக்கூடிய, படைத்துறையின் அதிசிறப்புப் பிரிவாகத் தனித்துவத் தகுதியைப் பெற்றிருக்கும் S. T. F இன், ஒரு தசாப்தகால வரலாற்றில் ஒவ்வொன்றுமே, குருதிக்கறை உறைந்த கொடுமைகளின் அத்தியாயங்கள் தான். தமிழீழத் தென் பிராந்தியத்தின் ஒவ்வொரு மண் துணிக்கைகளும் சுமந்து நிற்கும் உலகப் பிரசித்தி பெற்ற துயரக் கதைகளின் பிரதான நாயகர்களாக S. T. F படையாட்களே விளங்குகின்றார்கள். அவர்கள் செய்த கொடுமைகள்; கொடுமைகளை விஞ்சிய கொலைகள்; கொலைகளுக்குச் சளையாத அழிவுகள்; இந்த அனர்த்தங்களைப் புரிய ஈவிரக்கமற்று அவர்கள் கைக்கொண்ட முறைகள் – தென் தமிழீழத்தின் ஒவ்வொரு குடிமகனது ஆன்மாவிலும் என்றென்றும் ஆறாத வடுக்கள்!

பிரேமதாச ஆட்சியில் J.V Pயை இல்லாதழித்த அன்றும், இன்றும், என்றும் அழியாப் புகழ் பெற்ற – "அரும் பெருஞ் சாதனை"யை நிகழ்த்தியது இந்தப் படைதான் என்பதுவே –

தனது முதன்மையான சேவையிடமாகக் கிழக்கு மாகாணத்தைக் கொண்டுள்ள அது, தமிழ் மக்களுக்கு எவ்வித கொடூரங்களைச் செய்திருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்தப் போதுமானதாகும்.

போரியல் ரீதியில் – வனப்புற யுத்த முறையிலும், கெரில்லா எதிர்ப்புப் போர் முறையிலும் ( Jungle Warfare and Anti Guerrilla Warfare ) ஆற்றலூட்டப்பட்ட 'சிறப்பு அதிரடிப் படையானது, கிழக்குப் பிராந்தியத்தைச் சிங்களத்தின் ஆளுகையிலிருந்து பறிபோய் விடாமல் காக்கும் முக்கிய பணியைச் சுமந்திருந்ததுடன், கிழக்குப் போரரங்கில் புலிப்படைக்குப் பெருஞ்சவாலுக்குரிய, செயற்திறன் மிக்க ஒரு படையாகவும் திகழ்ந்தது.

எனவே தான் –

தாக்கப்பட்ட படைப்பிரிவு, அது இழந்த உயிர்த்தொகை, பறிகொடுத்த சுடுகலங்கள், அவற்றின் எண்ணிக்கை, தாக்குதல் நிகழ்ந்த போரரங்கு மற்றும் காலகட்டம், தாக்குதலின் முடிவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு – புளுகுணாவி அதிரடியானது, முல்லைத்தீவுப் பெருவீழ்ச்சிக்குப் பிறகு, சந்திரிகா – ரத்வத்த அரசாங்கத்திற்குப் புலிகள் கொடுத்த மற்றொரு பேரடி என ஆய்வாளர்கள் வர்ணிக்கின்றார்கள்.

S.T.F படை தொடரான தோல்விகளைச் சந்தித்து வரும் அண்மைக் காலக் கிழக்குக் களநிலவரத்தின் சிகரமாக, புளுகுணாவித் தோல்வி அமைந்துவிட்டது.

எப்போதும் போலவே தான் இதுவும், எம் வேவு வீரர்களின் நீண்ட, துன்பம் நிறைந்த. சிரமங்கள் குவிந்த பாடுகளின் பெறுபேறு, ஆட்களற்றுச் சூனியப் பிரதேசங்களாகிவிட்ட சுற்றுக் கிராமங்களூடு நகர்ந்து, அங்கு பதுங்கிப் பதுங்கி அலைந்து திரியும் எதிரியின் வெளிப்புறக் காவற் குழுக்களுக்கு மறைந்து, எதேச்சையாக அவர்களோடு மோத நேர்ந்த பல சந்தர்ப்பங்களில் அதிஸ்டவசமாகத் தப்பித்து மீண்டு, திரும்பத் திரும்பச்சென்று வெளிவேவு பார்த்தனர்! முள்வேலித் தடைதாண்டி, கண்ணிவெடிவயல் கடந்து, சுடுகுழல்களுக்கு ஒழிந்து, 'தேடொளி'களுக்கு மறைந்து, முகாமில் புகுந்து உள்வேவு பார்த்தனர்! வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே ஊசலாடி அவர்கள் கொண்டுவந்த தகவல்களே வெற்றியின் வேர்!

வேவு அணியின் முதல்வன் அகர்நாதன். சந்திவெளிச் சண்டைக்குப் போன இடையிலொரு நாள், நடுமுகத்தில் வெடிபட்டு படுக்கையில் வீழ்ந்த போதும், விட்ட பணி தொடரும் உளவேகத்தோடு காயம்மாற்றி, மீண்டும் திரும்பி வந்து வேவு செய்தவன், 'ஆரில்லறி' பகுதி அணிக்கு வழிகாட்டியாகக் களத்திலுமிறங்கினான். தாக்குதலில் காயப்பட்ட ஈழவேங்கை, கோகுல்ராஜ் மற்றும் அசதன், நிலேஸ் ஆகியோரை ஏனைய முதன்மையாளர்களாகக் கொண்ட வேவு அணிக்கு, வழிப்படுத்தும் பொறுப்பாளராகச் செயற்பட்டுத் தகவல் சேகரிப்பை முழுமையாக்கிப் பூர்த்தியாக்கினார். முதன்மைத் தளபதிகளுள் ஒருவரான ரமேஸ்,

எங்கோ தொலைவிலிருந்து தூர நோக்கியால் பார்த்த ஒரு மாலை, மறைந்தும் மறையாமலும் புகையாய் வீற்றிருந்த 'ஆரில்லறி'யைக் கண்ணுற்ற சந்தோச வேளை –

உறுதிப்படுத்த விரைந்த எம் வேவு வீரர்கள், சென்று பார்த்து ஊர்ந்து திரும்புகையில், கண்டுவிட்ட எதிரி "ஊறா துவணவா! ஊறா துவணவா!" என்று சுட்டுத்தள்ள, வெடிபட்டு வீழாமல் தப்பித்து மீண்டு வந்து "அது, அதுவே தான்!" என்பதை அறியத்தந்த கணம் புளகாங்கிதத்தின் உச்சம்!

புலிகளின் முதுநிலை – முதன்மைக் – கள வழிநடத்துனர்களுள் ஒருவரும், மட்டக்களப்பு–அம்பாறைத் தளப்பிராந்தியச் சிறப்பு ஆணையாளருமான தளபதி கருணா அவர்கள் சமர்ப்பித்த நடவடிக்கைத் தகவற் தொகுப்பை, தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆழமாகவும், முழுமையாகவும் ஆராய்ந்தார்.

வேவுத் தரவுகளை நோக்கினார்; 'காணொலி' நாடாவிற் பதியப்பட்ட தளத்தையும், தளச்சூழலையும் அவதானித்தார்; இராணுவ –புவியியற் தன்மைகளைக் கவனித்தார்; தளத்தின் பலம் – பலவீனங்களை எடை போட்டார்; தாக்கக்கூடிய வழிமுறைகளைப் பரிசீலித்தார்; தாக்குதலை முடித்துக் கொண்டு அணிகள் பாதுகாப்பாக வெளியேறக்கூடிய ஏது நிலைகளை ஆலோசித்தார். தளபதி கருணா அம்மானோடு கலந்துரையாடி, அவருக்கு அறிவுரைகள் வழங்கி, தீட்டப்பட்ட திட்டத்தை மேலும் மெருகூட்டி, அதன் இறுதிவடிவத்தை வரைந்த தலைவர் அவர்கள், தாக்குதற் திட்டத்தின் செயலாக்கத்திற்கான ஒப்புதலையும் அளித்தார்.

வடக்குப் போரரங்கில் நிறுத்தப்பட்டிருந்த, புலிகளின் முதன்மைத் தளபதிகளுள் ஒருவரும், முல்லைச் சமரில் காத்திரமான பங்குவகித்தவருமான – தளபதி ராம் அவர்களின் கட்டளைப் பணிப்பின் கீழிருந்த தென்பிராந்தியப் படையணியை, புளுகுணாவித் தாக்குதலுக்காகவும், கிழக்குப் போரரங்கின் தொடர் நடவடிக்கைத் திட்டத்தின் பொருட்டும் – மீண்டும் கிழக்கிற்கு நகர்த்தி –

புளுகுணாவித் தளத்திலிருந்து 'ஆரில்லறி'யை பாதுகாப்பாகவும், பக்குவமாகவும் அப்புறப்படுத்துவதற்கு வசதியாக, 'ஆரில்லறி'ப் பயிற்சியளிக்கப்பட்ட சிறிய குழு ஒன்றையும் கூட அனுப்பி –

"ஆரில்லறி எடுக்கப்பட்டு விட்ட வெற்றிச் செய்திக்காக நான் காத்திருப்பேன்' என வாழ்த்தி வழியனுப்பி வைத்த தலைவர் அவர்களின் நம்பிக்கை வீண்போகவில்லை!

அம்பாறையிலிருந்து, 'மகா ஓயா' நெடுஞ்சாலையில் 19 கிலோமீற்றர் தூரத்தில், 16ஆம் மைல் கல்லுக்கு அருகில் அமைவிடத்தைக் கொண்டுள்ளது தளம். அதிரடிப்படையின் 3 'ப்ளற்றூன்' களையும், இறப்புக்கு முன் 'கப்டன்' →

தூரத்திலிருந்த மேஜர் சிறிவர்ணவின் தலைமையிலான, ஆரில்லறி' ரெஜிமென்டின் படைப்பிரிவு ஒன்றையும் இணைத்த 140 வரையான துருப்புக்கள் அங்கு நிலைகொண்டிருந்தனர். அந்த அதிரடிப்படை – இராணுவ கூட்டிணைப்புத்தளத்தின் கட்டளைப் பணிப்பாளர் இன்ஸ்பெக்ரர் எல் ஐ. குணரட்ண. தாக்கப்படக்கூடும் என முன்னுரைப்பட்டு – பலப்படுத்தப்பட்டு – கடைசிக்காலத்தில் மேலும் பெரிதாக்கப்பட்டு, 5 வரையான சுற்றுத் தடை வேலிகளோடு காப்பு வியூகமிடப்பட்ட முகாமின் விஸ்தீரணம் 300 மீற்றர் நீளம்; 250 மீற்றர் அகலம். பரந்து, பல கிலோ மீற்றர்களுக்கு அகன்று கிடக்கும் ஆட்களற்றுச் சூனிய நிலமாகிவிட்ட சுற்றுக்கிராமங்களுக்குள் 24 மணி நேரமும் 'அசையும் காவற் குழு'க்களை நகரவிடுவது – தேடி வரும் ஆபத்தை வாசலுக்கு வெளியிலேயே எதிர்கொண்டு தடுக்கும் மேலதிக பாது காப்பு ஏற்பாடு.

பகலிரவு பாராமல், ஊனுறக்கம் கருதாமல், வெற்றியன்றி வேறெதுவும் நினையாமல், தாக்குதல் வழிமுறைப்பட்ட ஒத்திகைப் பயிற்சிகளைப் பெற்ற புலிவீரர் வகுக்கப்பட்ட அணிகளாய்க் கூடியிருக்க, தளபதி கருணாம்மான் அவர்கள் இறுதியுரையை வழங்கினார்; உறுதியூட்டும் தெளிவுரையாக அது பிறந்தது.

''பெரியதொரு படை நகர்த்தலுக்கு நாம் தயாராகிவிட்டோம், முல்லைத்தீவுத் தாக்குதலுக்குப் பிறகு, இயக்கத்தின் அடுத்த பெரிய நடவடிக்கைக் களமாக இது இருக்கப்போகிறது. முன்பு – புதுக்குடியிருப்புத் தாக்குதலில் எம்மால் முழுமையான வெற்றியைப் பெறமுடியவில்லை; அம்பிலாந்துறை, கிண்ணியடி தாக்குதல்களிலும் முகாம்களை எம்மால் விழ்த்த முடியவில்லை. ஆனால் சில பின்னடைவுகளைச் சந்தித்தமைக்காக நாம் தோல்வி மனப்பான்மையை அடைந்துவிடக்கூடாது. அந்தக் களங்களில் வீழ்ந்த எம் தோழர்களின் நினைவோடு, குறிப்பாக, கரும்புலி றங்கனின் முதல் வருட நினைவோடு இந்த நடவடிக்கையில் நாம் முழுமையாக வெல்லவேண்டும்!

தள நிலைமை முற்றிலும் எமக்குச் சாதகமாகவே உள்ளது; செய்யப்பட்டுள்ள முற்தயாரிப்புகளில் எந்தக் குழப்பமும் இல்லை; வரையப்பட்டுள்ள தாக்குதற் திட்டத்தில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை; நடவடிக்கைக்குத் தலைவர் அவர்கள் பூரணமான ஒப்புதலை அளித்துள்ளார். சொல்லித் தரப்பட்டவற்றிற்கு மாறில்லாமல் நீங்கள் ஒவ்வொருவரும் நிதானமாகவும், முழுமையாகவும், வேகமாகவும் செயற்படுங்கள். வெற்றி எமக்குத்தான்! எமது பிராந்தியத்தில் இது முக்கியமான தாக்குதல். வெற்றிச் செய்திக்காகத் தலைவர் அவர்கள் ஆவலோடும் நம்பிக்கையோடும் காத்திருக்கின்றார். அங்கு ஏனைய போராளிகளும், தளபதிகளும் எதிர்பார்த்துள்ளார்கள். ''முகாம் வீழ்த்தப்பட்டு 'ஆரில்லறி' யும் எடுக்கப்பட்டுவிட்டது!'' என்ற செய்தியை நாம் அனுப்பவேண்டும் ''துணிந்தவன் வெல்வான்!'' என்பது உண்மை. எமக்கும் இப்போது துணிவுதான் தேவை. உறுதியோடும் துணிவோடும் செல்லுங்கள்; வெற்றி எமக்குத் தான்!''


டிசெம்பர் 10 ஆம் நாளின் பின்னிரவு. கருமுகில் கவிந்த வானத்திலிருந்து மழைத் துளிகள் பன்னீராய்த் தூவி வாழ்த்த அணிகள் நகரத்தொடங்கின; நடவடிக்கை ஆரம்பித்துவிட்டது. ஒட்டுமொத்தக் கட்டளைப் பணிப்பாளராகத் தளபதி கருணாம்மான் நடவடிக்கையை ஒருங்கிணைத்து நெறிப்படுத்த, கருணாம்மானின் துணைவராக தளபதி ராம் அவர்கள் தாக்குதற் களத்தை வழிப்படுத்தினார் முகாம், இரண்டு முனைகளினூடாகத் தாக்கப்பட்டது. 'ஆரில்லறி' நிலையினை உள்ளடக்கிய தளத்தின் ஒரு பகுதியை வீழ்த்தும் பணி– இளநிலைத் தளபதிகளுள் ஒருவரும், முல்லைத்தீவு, கிளிநொச்சிச் சமர்களில் பங்கேற்றவருமான – தாத்தாவின் அணிக்குரியது. தளத்தின் மறு பகுதியை வீழ்த்தும் பணி – இன்னொரு இளநிலைத் தளபதியும், கிழக்கு முனையில் பல வெற்றிக் களங்களைக் கண்டவருமான – ஜீவனின் அணிக்குரியது.

முகாம் தாக்குதலணிகளுக்கு மேலதிக உதவி வழங்குவதற்குரிய துணை அணிகளாகவும், வழங்கல் மற்றும் வேறு பணிகளுக்குரிய அணிகளாகவும் - கிழக்கு முனையின் சிறந்த களத் தளபதிகளான விஸ்னு, குட்டி, நாதன், சைலன் மற்றும் குமரன் ஆகியோரது சண்டைப் பிரிவுகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டன.

ஒரு புறம் – அம்பாறை நோக்கிய வீதியில் – கொண்டைவெட்டுவான் முகாமிலிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காகவும், மறு புறம்– பதுளைநோக்கிய வீதியில் –புளியடி முகாமிலிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காகவும் இளநிலைத் தளபதிகளான சுது, பாலேந்திரா ஆகியோரது அணிகளும், இந்த அணிகளுக்குரிய மேலதிக உதவிகளை வழங்கக்கூடிய தயார் நிலையில் மகளிர் படையணியின் இள நிலைத் தளபதிகளுள் ஒருவரான மதனாவின் சண்டைப் பிரிவுகளும் நகர்த்தி நிறுத்தப்பட்டுவிட்டன.

டிசெம்பர் 11ஆம் நாளின் முன்னிரவு. அதிகாலை மணித்துளிகள். சூழ்ந்து நெருங்கும் பேரழிவை அறியாது அமைதியாயிருந்தது தளம். மழை; கடும் மழை; மூசிப்பெய்தது மழை! குளிரில் நடுங்கித் தூங்கிக்கொண்டிருந்தனர் சிங்கள வீரர்களுள் பலர். மாவீரர் நாளுக்கு அடி விழும் என்று நித்திரை விழித்துக்காத்திருந்தகளைப்புத் தீராமல், காவலரண்களில் தூங்கி வழிந்துகொண்டிருந்தார்கள் மற்றவர்கள். 'மகா ஓயா' போரரங்கப் பகுதியின் S.T.F தளபதி ASP. மேனநாயக்காவும் அன்று அங்கேதான் படுக்கையைப் போட்டிருந்தார். அவசரப்படாது, ஆறுதலாக, அமைதி காத்து, நிதானமாக – புலிகள் அண்மித்துக்கொண்டிருந்தனர். தரையோடு படர்ந்து, அணுஅணுவாய் ஊர்ந்து, தளத்தின் வெளிப்புறக் காப்பு வியூகத்திற்கு ஒருசில யார் தூரம்வரை நெருங்கிவிட்டனர். இதோ! சண்டை ஆரம்பிக்கப்போகின்றது! வேகப்பட்ட இதயத் துடிப்போடு காத்திருந்த கணங்கள்! நகரும் அணிகளில் எமது சிறு ஒலியும் எதிரியை உசார்ப்படுத்தும்; எமது சிறு சரசரப்பும் எம்மைத் தோல்விக்குள் தள்ளும்; எமது சிறு இனங்காட்டலும் எமக்குப் பேரழிவைத் தரும். பெரு வெற்றிக்கும் பெருமிழப்பிற்கும் இடையில் ஊசலாடிய அந்தவேளை – திடீரென, துரதிஸ்டவசமாக, தாத்தாவின் அணியில் நகர்ந்துகொண்டிருந்த எம் வீரன் கடலரசனுக்குக் காலில், மிதிக்கண்ணி வெடித்தது! பெருஞ்சத்தம்!

எதிர்பார்த்திருக்க வேண்டியது தான்; நிகழக் கூடியது தான்; இருந்தும், எது நடக்கக் கூடாதென அவதானம் பேணப்பட்டதோ அது நடந்துவிட்டது. எதிரி உசார்ப்பட்டிருப்பான்; சத்தத்தின் காரணம் அறிய காதுகளைக் கூர்மையாக்கியிருப்பான்; இரைந்து கொட்டிய மழைத் துளிகளினூடு கண்களை நீட்டித் துளாவியிருப்பான். ஏனோ, எதனாலோ, பன்றிதான் சிக்கியிருக்கும் என அவன் நினைத்ததனால் தானோ என்னவோ, அவன் சுடவில்லை! எம் நல்லகாலம், அல்லது அவனது கெட்டகாலம் – சுடுகலங்களை ஒன்றுசேர்த்து அவன் முழக்கித் தள்ளவில்லை!




ஆனால் கடலரசன் கத்தியிருந்தால்; பிய்ந்து சிதறிய பாதத்தின் வேதனை தாங்காது குரலெடுத்திருந்தால்; ''பன்றியல்லப் பகைவர் நாம் புலிகளே'' என்பதை இனங்காட்டிக் கூவியிருந்தால் நடந்திருக்கக்கூடிய அனர்த்தம் கற்பனைக்கே கஸ்டமானது! புளுகுணாவிப் பகைத் தளத்தின் வேலிச் சுருள் கம்பிகளுக்குள் எம் தோழர் சிக்கிச் சிதறிக்கிடக்கும் பெருந்துயர் நேர்ந்திருக்கும்! ஆனால் அப்படி நடக்கவில்லை; அப்படி நடக்க அந்த வீரன் விடவில்லை. தான் பட்ட வேதனையைத் தனக்குள்ளேயே தாங்கிக் கொண்டான் எம் தோழன்! கட்டுப்போட, தூக்கியெடுக்க, வெளியில் அகற்ற எதற்குமே அங்கு அவகாசமில்லையென அவன் அறிவான்: அதற்கு முயன்றவர்களைத் தடுத்தான். நிதானமாக, உறுதியாக, அமைதியாக, முன்னேறிய தோழர்களுக்கு விடையளித்தான். அந்தப் பெரு வெற்றியின் முதல்விலையாக, அவன் தன்னைச் செலுத்தத்துணிந்தான். குருதி ஓடிக் குருதி ஓடி. மெல்ல மெல்ல எம் தோழன் கண்மூட, அவனைப் பிரிந்து, வெற்றி தேடி, வெற்றி தேடி மெல்ல மெல்ல எம் வீரர் நெருங்கினர்.

புலிகளுக்கு நேரம் 12.45; பகைவனுக்கு நேரம் 1.15. திகைப்பூட்டும் அடி! மயிர்க்கூச்செறியும் தாக்குதல்! 81 மில்லிமீற்றர், 60 மில்லிமீற்றர் மோட்டார்களின் முழக்கத்தோடு ஆரம்பித்தது உக்கிர சண்டை! கடுஞ் சீற்றமான மூர்க்கப் பாய்ச்சல்! காப்புத்தடை வியூகங்களை உடைத்து ஆவேசமாய் நுழைந்தனர் புலிகள்! 'ஆரில்லறி' நிலையினை விழுத்துவதே முழுக் கவனமும் செலுத்தப்பட்ட ஆரம்ப இலக்கு; ஏற்ற வழிமுறையிலேயே தாக்குதல் திட்டமும் வகுக்கப்பட்டிருந்தது. சண்டை ஆரம்பித்த பத்தாவது நிமிடம், 'ஆரில்லறி'யைப் புலிகள் கையேற்றனர். அதைத் தடுப்பதற்காகச் சண்டையிட்ட எதிரியின் 'ஆரில்லறி'ப் பிரிவினர் முழுமையாகவே அழிக்கப்பட்டனர். உக்கிரமாகச் சண்டை நீண்டது. தளத்தைத் தக்கவைக்கவும், இழந்துவிடாமல் காத்து 'ஆரில்லறி'யை திரும்பவும் மீட்டெடுக்கவும் பகைவன் கடுமையாகப் போரிட்டான்; தன்னால் இயலுமான உச்சக் கட்டத் தற்காப்புச் சண்டையை நிகழ்த்தினான்; அயற் தளங்களிலெல்லாம் அவலமாய் உதவி கோரினான்.



## சிறப்பு அதிரடிப்படையின் துணைத் தளபதி DIG. சகபந்து

உகண பகுதியின் ஹிங்குராகொட வான்படைத் தளம் கையாலாகாத நிலையில் கிடந்தது. கொட்டிய மழை பகைவனுக்கு கொடுமை செய்தது. முகாமைப் பாதுகாப்பதற்கான சண்டையில் எவ்வித பங்கையும் வகிக்கமுடியாமல் வான்படைக்கு இடையூறு விளைவித்தது மழை!

இரண்டே கிலோ மீற்றர் தூரத்திலிருந்தபுளியடி" முகாம் சிப்பாய்கள் புத்திசாலிகள்! உதவிக்குப் போவதற்குப் பதிலாக, தாமும் தாக்கப்பட்டு விடுவோம் என்ற பீதியில் முகாமை முற்றாகக் கைவிட்டு வெளியேறிப் பக்கத்துக் காட்டுக்குள் பதுங்கிக்கொண்டிருந்தனர்.

பத்து கிலோமீற்றர் தூர சுற்றுப்பாதைக்கு அப்பாலிருந்த சொண்டைவெட்டுவான் முகாம் படையினர் பாவம்! உதவிக்குப் போய் உபத்திரவப்பட்டு, போனவழியில் அடிவாங்கி, தாக்கியழிக்கப்பட்ட Buffel கவச வண்டியோடு திரும்பியோடினர்!

ஒரு மணிநேரக் கடும் சண்டையின் பின் ஏனைய முகாம்களுடனான தொடர்பைத் தளம் இழந்தது. அங்கு நடைபெறுவது என்ன என்பதை அறிய முடியாத நிர்க்கதி நிலையில் மற்றைய முகாம்கள் தவித்திருக்க, அங்கு – 50 வரையான படையினர் கொல்லப்பட்டும், மேலும் அதே தொகையினர் காயப்பட்டும் வீழ்ந்து போயிருக்க, தளத்தைப் பாதுகாப்பதென்பது செய்தற்கரிய ஒரு இடரார்ந்த தொல்லையாகவே ஆகிப்போக, எஞ்சிய சிப்பாய்களும் தளபதிகளும் தப்பியோடிவிடும் முடிவுக்கு வந்தனர். சுற்று முகாம்களிலிருந்து பகைவனுக்குக் கிடைத்த 'ஆரில்லறி' தாக்குதற் துணையையும் இகழ்ச்சிக்குரியதாக்கி வியப்பூட்டும் அதிரடியை நிகழ்த்திய புலிகள், வேறு வழி எதையும் அவர்கட்கு விட்டுவைக்கவில்லை. இரண்டு மணிநேர தொடரடியின் பின்பு, தாம் முழுமையாக அழிந்து போவதைத் தவிர்ப்பதற்காகக் காயப்பட்ட சகாக்களையும் தூக்கிக்கொண்டு எஞ்சிய சிங்கள வீரர்கள் தப்பியோட, தளம் புலிகளின் கைகளில் முழுமையாகவே விழுந்தது!

* * *

அதே கிழக்குப் போரரங்கு. வேறொரு சந்தர்ப்பம்; வேறொரு முனை; வேறொரு இலக்கு; வேறொரு பாணி. அதே ''சிறப்பு அதிரடிப் படை''யின் துணைக் கட்டளைத் தளபதியான – இறப்புக்கு முன்னர் 'SSP' தரத்திலிருந்த – DIG எச். உபாலி டி.பி.ஏ. டீ. சொய்சா சகபந்து அவர்கள் –

டிசெம்பர் 17ஆம் நாள் மாலை 4.30 மணியளவில், மட்டக்களப்பு – கல்முனை பிரதான சாலையில் காரைதீவு S.T.F. தளத்திற்குப் போய்க்கொண்டிருக்கும்போது, கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தரவைக்கோவில் எனுமிடத்தில் வைத்து, காத்திருந்து – சரிவர இனங்கண்டு – தனது 'பஜரோ' வண்டிமீது 'மோட்டார் சைக்கிளோடு' மோதி நிகழ்த்தப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

மிகப் பிரபல்யம் வாய்ந்த சிங்களப்படை அதிகாரியும், ஒரு தசாப்த காலத்திற்கும் அதிகமாக போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவரும், வியாபித்த துறைசார் பட்டறிவுகொண்ட ஒரு போரியலாளருமான DIG சகபந்து, கிழக்குப் போரரங்கில் புலிகளை முறியடிப்பதற்கான போர்ச் செயற்பாடுகளில், தாக்கம் மிகுந்த – இன்றியமையாத – பங்கினை வகித்தவராவார்.

[ 9 ஆம் பக்கம் பார்க்க ]

# நியூட்டனின் விதியும் விடுதலைப் போரும்

வீ. மணிவண்ணன்

உலகின் கண்களுக்கு முன் மாபெரும் மனித அவலமொன்று அரங்கேறிவருகின்றது. வரலாற்றாய்வாளர்கள், மனித ஆர்வலர்கள், மனித உரிமை அமைப்புக்கள் இம்மனித அவலத்தை எவ்வாறு சித்தரிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. ஆனால் தமிழனாய்ப் பிறந்து விட்டதினால் துன்பச் சிலுவையை சுமந்து கொண்டு சதா அலைந்து துயரங்களிலும், வேதனைகளிலும் தன்னை மாய்த்துக் கொள்வது தான் தமிழனின் தலைவிதியா? முல்லைத் தீவில் ஏற்பட்ட தோல்விக்கு பழிவாங்குமுகமாக சிறீலங்கா படையினரது ''சத்ஜெய'' இராணுவ நடவடிக்கையினால் இரண்டு லட்சத்திற்குமதிகமான தமிழர்கள் இடம்பெயர்ந்து இருக்க இடமின்றி தெருவோரங்களிலும், காடுகளிலும் எந்த விதமான அடிப்படை வசதிகளுமின்றி அலைந்து திரிவது உலகின் கண்களுக்குப் படவில்லையா? இருக்க இடமில்லை, உணவில்லை, மருத்துவ வசதிகளில்லை. சுத்தமான குடிநீருக்கே தட்டுப்பாடு என்று மனிதவாழ்வின் மாபெரும் அவலம் இங்கு நடைபெறுகின்றது. இங்கு இடம்பெயர்ந்துள்ள மக்களிற்பலருக்கு இது முதற் தடவையனுபவமல்ல. தீவகத்திலிருந்தும், வலிகாமத்திலிருந்தும், தென்மராட்சியிலிருந்தும் தற்போது கிளிநொச்சியிலிருந்தும் இடம் பெயர்ந்தவர்கள் அநேகர், இனி எங்கேதான் போவது? எவ்வளவு காலத்துக்கு இப்படி ஓடுவது? என்றெழும்பும் வினாக்களுக்கு விடை தெரியாமலே அவர்களது இடப்பெயர்வுகளும் அவலங்களும் தொடர்கின்றன.

''தனியொரு மனிதனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம்'' என்றான் பாரதி. இங்கோ இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களிற்கு உணவில்லை எந்த உலகத்தை நாம் அழிப்பது? வன்னி வளநாட்டின் விவசாய நிலப்பிரதேசங்களினூடாகவே சிங்களப்படையெடுப்பு நடைபெறுகின்றது முன்பு குடாநாட்டு படையெடுப்பின்போதும் ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களை அழித்தே எதிரி முன்னேறினான். உணவு ஒரு ஆயுதமாக சிங்களப்படை பயன்படுத்திவருகின்றது. இன்னும் பொருளாதாரத்தடை, மீன்பிடித்தடை, விவசாய உள்ளீட்டுத்தடை என தமிழன் வாழ்வதற்கே அடுக்கடுக்கான தடைகள். வாழ்வா, சாவா என்று தமிழன் தடுமாறிக் கொண்டிருக்கின்ற இந்நிலையில் பாரதி பிறந்த மண்ணிலிருந்து உருப்படியான சிங்களத்தை எச்சரிக்கும் அழுத்தமான குரல்கள் எழுந்தனவா? மனிதாபிமானம், மனித உரிமைகள் என்று வாய்கிழியப் பேசும் அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் வாய் திறந்தனவா? தீர்வுப்பொதியை எட்டிப் பார்க்கத் துடிக்கும் தமிழ்க் குழுக்கள் எங்கே? மன்னிப்புச்சபையென்றும் மனிதாபிமான அமைப்புகள் என்றும் உலகம் முழுக்கப் பணியாற்றுபவர்கள் எங்கே? இவர்களைத் தமிழர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அகதியாக இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் தங்களிற்கு யாரேனும் ஆறுதல் வார்த்தைகள் சொல்ல மாட்டார்களா? அனுதாபம் தெரிவிக்க மாட்டார்களா என்று ஏங்குகின்றார்கள். உதவிக்கரம் நீட்டுவதற்கு யாரேனும் உண்டா என்று பரிதவிக்கின்றார்கள்.

தமிழன் தனது தலைவிதியை நினைத்து நொந்துகொண்டிருக்கிறான். அலைந்து திரிவதும் அழிந்துகொண்டிருப்பதும் தான் வாழ்க்கையா? மனித வாழ்வின் மாபெரும் அவலம் எனும் துன்பியல் நாடகம் தற்போது வன்னியில் அரங்கேறிவருகின்றது. தமிழன் தனது இருப்பிற்காக போராட வேண்டிய நிலையில் உள்ளான். ஆனால் சிங்களமோ தனது பேரினவாதத்திற்காக தமிழனை அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டுநிற்கிறது. இந்நிலையில் நாம் என்ன செய்வது? அழிந்து போவதுதான் தீர்வா?

யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடைந்ததிலிருந்து தமிழர்களது அடிமை வாழ்வின் அவலம் ஆரம்பமாகியது. சிங்களத்தின் ஆட்சியில் இது உச்சநிலையடைந்தது. பாரம்பரிய நிலம் பறிப்பு, கல்வி, மொழி பறிப்பு, பண்பாட்டழிப்பு, இனப்படுகொலை போன்ற சகல வழிகளிலும் தமிழர்கள் ஒடுக்கப்பட்டார்கள், அழிவுகளையும், துயரங்களையும், ஏமாற்றங்களையும் தமிழர்கள் மட்டும்தான் அனுபவித்தார்கள். அவர்கள் இதனை சிங்களப் பேரினவாதிகளுக்கு உணர்த்தவில்லை. ''எந்தவொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு'' என சேர் ஐசாக் நியூட்டன் எனும் மாபெரும் விஞ்ஞானி தனது இயக்கவியல் தத்துவத்தில் ஒரு விதியாக குறிப்பிட்டுள்ளார். மரத்திலிருந்து ஒரு பழம் தானாக விழும்போது, அது நிலத்தில் வந்து அடிபடுகிறது. நிலத்திற்கும் தாக்கம், பழத்திற்கும் தாக்கம். நாம் எமது அன்றாடவாழ்வில் விறகுகொத்தினாலும் சரி மேளம் அடித்தாலும் சரி எமது ஒவ்வொரு செயலுக்கும் நாம் கொடுக்கின்ற ஒவ்வொரு விசைக்கும் எதிர்விசையெம்மைத் தாக்குவதை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. எமது சாதாரண செயல்களிற்கே பதில் தாக்கம் கிடைக்குமென்றால் மனிதவாழ்வில் ஏற்படும் மாபெரும் துன்பங்களிற்கும் துயரங்களிற்கும் பதில் தாக்கம் கிடைக்காதா? இந்த விதியானது சடப்பொருட்களிற்கு மட்டுமல்ல மனித வாழ்வியக்கத்திற்குமே அடிப்படையானது. இதுதான் சிங்களவர்களிற்கு விளங்கக்கூடிய ஒரேயொரு மொழியாகும். தமிழன் வாழ்வதற்கு போராடுவதுதான் ஒரேயொரு வழி என்று போராடக் கற்றுக்கொடுத்த மாமனிதர் தலைவர் பிரபாகரன் அவர்களே. ''அவலத்தைத் தந்தவனுக்கே அதனைத் திருப்பிக்கொடு'' என்கிறார். நியூட்டனது இயக்கவியல் விதியும், தலைவரது போராட்ட விதியும் எவ்வாறு பொருந்தி வருகின்றது என்பதை இங்கு கவனிக்கவேண்டும்.


விடுதலைப் போராட்டத்தில் நியூட்டனது விதியானது எவ்வாறு செயற்படுகின்றது என்பதைப் பார்ப்போம். தமிழ்மக்களின்மீது சிறீலங்கா அரசு தொடுத்துள்ள யுத்தமானது அதன் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது. உலகின் மிகவறிய நாடாகவும், குழப்பகரமான நாடாகவும் சிறீலங்கா விளங்குகின்றது. முதலீட்டாளர்களும், உல்லாசப் பிரயாணிகளும் வர அஞ்சும் நாடாகவும் அது விளங்குகின்றது. பல கோடி பணத்தை விளம்பரத்திற்கு செலவு செய்தும் இந்து சமுத்திரத்தின் சொர்க்கம் எனும் பழைய பெயரை நிமிர்த்த முடியாமலுள்ளது. மேலும் சாதாரண சிங்களமக்களின் மீது எவ்வாறு யுத்தம் பெருஞ்சுமையினை சுமத்தியது என்று பார்ப்போம்.

விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தியாவசிய – பொதுநல சேவைகளின் பற்றாக்குறை, பாதுகாப்புவரி என்று ஒரு புறமாகவும் தென்னிலங்கைக்கு யுத்தத்தை கொண்டு வந்த சந்திரிகாவின் புத்திசாலித்தனத்தால் பாதுகாப்பு கெடுபிடிகள், போக்குவரத்து நெருக்கடிகள், அச்சம், சோகம் இன்னும் சில இடங்களில் அகதி வாழ்க்கை, பாதுகாப்பு காரணங்களிற்காக நீர்த்தேக்கங்களை திறந்து விட்டதனால் மின்சாரத்தட்டுப்பாடு, பாதுகாப்புச் செலவை ஈடுசெய்வதற்காக அரச நிறுவனங்களை விற்க முற்பட்டதனால் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் என்பவை சிங்கள மக்களின் மீது திணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழர்களை அழிப்பதற்காக உருவாக்கப்பட்ட சிங்கள இராணுவமானது இன்று ஊதிப்பருத்து ஆயிரக்கணக்கான கோடி பணத்தை ஏப்பமிடும் பகாசுரனாக மாறிவிட்டது. இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே இன்று தென்னிலங்கையில் சமூக விரோத செயல்களில் ஈடுபடும் முன்னணி குற்றவாளிகளாக காணப்படுகிறார்கள். மேலும் போரில் கொல்லப்படும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர்களிலும், காயமடைந்து அங்கவீனமாகும். ஆயிரக்கணக்கான படையினர்களின் பாரத்தை யார் சுமப்பது? ஆயிரக்கணக்கான சிங்களவிதவைகளைஉருவாக்கியதுயார்? ஆரம்பத்தில்ஏழைகிராமப்புறசிங்களவர்கள் இழப்புக்களைச் சந்தித்தார்கள். ஆனால் கடற்படை, விமானப் படைகளின் மீதான தாக்குதல்கள் அதிகரித்ததையடுத்து சோகம் சிங்கள மேட்டுக்குடிகளுக்கும் சொந்தமாகியது. மொத்தத்தில் சிங்களப் பேரினவாதம் திணித்த யுத்தம் சிங்களவர்களையே பலிக்கடாவாக்கியுள்ளது.

இன்று தமிழர்களை அகதியாக்க வேண்டுமென்று சிங்களம் வெறியோடு செயற்படும் போதெல்லாம் தமிழர் தாயகப் பகுதிகளில் குடியேறிய சிங்களவர்களும் சேர்ந்து அகதிகளாகுவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இவர்கள் யார்? தமிழர்களது தாயகக்கோட்பாட்டை சிதைப்பதற்காக; இலங்கையின் வடக்கு கிழக்கை துண்டாடுவதற்காக சிறீலங்கா அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு குடியமர்த்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள். இவர்கள் ஆயுதபாணிகள். இவர்கள் தமிழர்களுக்கெதிரான போரில் மிகவும் முக்கிய பாத்திரம் வகிப்பவர்கள். தமிழர்கள் நிலங்களை பலாத்காரமாக பறித்து அதில் குடியமர்ந்து இராணுவத்துடன் சேர்ந்து தமிழர்களை அழிப்பவர்கள். ஆனாலும் இவர்கள் அகதிகளாகும்போது உலகப்பத்திரிகைகளும், சிங்களப்பத்திரிகைகளும் பக்கம் பக்கமாக எழுதும், படம் பிடிக்கும். அப்புகாமி வேட்டைத் துப்பாக்கியையும், கத்தியையும் எறிந்து விட்டு படங்களுக்குப் போஸ் கொடுப்பார். நிவாரண அமைப்புகள் பொருட்களைக் கொண்டுவந்து கொட்டும். மனித உரிமை அமைப்புகள் வாய்கிழிய கத்தும். தங்களைத் தாங்களே புத்திஜீவிகள் என்று அழைத்துக்கொண்டும் முட்டாள் தமிழர்கள் காட்டுமிராண்டித்தனம் என்பார்கள். ரோசமில்லாத தமிழ்க்குழுக்கள் பாசிசம் என்பார்கள். இதெல்லாம் நடந்த விடயங்கள். ஆனால் அகதியாக, அநாதரவாக அலைந்து கொண்டிருக்கும் தமிழனுக்கு இவைஒன்றுமில்லை. மழையிலும், வெய்யிலிலும் அவன் அலைந்து கொண்டிருக்கும்போது உணவுத்தடை ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்படும். அனைத்துலக பத்திரிகையாளர்களை அரசாங்கம் ''கவனிக்க' தமிழனது துன்பதுயரங்கள் வெளியுலகிற்கு தெரியாமல் ஆழமாக புதைக்கப்படும்.

மரங்களின் கீழ் குடிதண்ணீரின்றி தமிழன் ஏக்கத்துடன் பார்க்கும்போது நிவாரண அமைப்புகள் வாய்மூடி மௌனமாகி ஒதுங்கி நிற்கும். அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்று சொல்லும். உதவி வழங்கும் நாடுகள் என்ன கொடுக்கின்றார்கள் என்பதை ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போது தனது தலையின் மேல் என்ன விழுகின்றது என்பதை பார்த்துத்தான் அகதித் தமிழன் தெரிந்து கொள்வான். ''வழமையான'' இராணுவப் பயிற்சி, ஆயுத தளபாட உதவி முகாமைத்துவம் வழங்கும் நாடுகளின் கருணைகள் (?) பற்றி தமிழனுக்குத்தான் தெரியும். குறிப்பாக இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இதனை நேரடியாக பார்க்கலாம். இவ்வாறன பயிற்சிகளின் பின்பு தமிழர்கள் காணாமற் போவதும், சித்திரவதை செய்யப்படுவதும், பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதுடன் கடித்து துன்புறுத்துவது என்று புதிய அணுகுமுறையையும் சிங்களப்படையினர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழினத்தை அழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதா அல்லது அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்துக்கு ஆதரவுக் கரம் நீட்டுவதா எது தர்மம் என்று உலகநாடுகள் சிந்திக்க வேண்டும். அன்று எம்பிலிப்பிட்டி பாடசாலை மாணவர் படுகொலை, சூரியகந்தை மனித புதைகுழி இன்னும் ஜே.வி.பி கால டயர் மாலை கதாநாயகர்கள் யாவரும் இன்று யாழ்ப்பாணத்தில்தான் இருக்கின்றார்கள். சிங்களவர்களையே இரக்கமின்றி கொன்றவர்கள் தமிழர்களை விட்டு வைப்பார்களா? அதற்கு பயிற்சி கொடுக்கலாமா?

தமிழர் நாகரிகத்தின் சின்னமாகவும், தமிழர்களது பண்பாட்டின் அடையாளமாகவும் இருந்த →



'' தனியொரு மனிதனுக்கு உணவில்லையேல்...''

யாழ். குடாநாட்டை சிங்களப்படை கைப்பற்றி சிங்கக் கொடியேற்றியது. தாங்கள் துட்டகைமுனு என்றும் சப்புமல்குமார என்றும் சந்திரிகாவும் ரத்வத்தையும் அகங்காரக் கூச்சலிட்டார்கள். அமைச்சர்கள் தமது பரிவாரங்கள் புடைசூழ வீர தீர யாழ்ப்பயணங்களை மேற்கொண்டு ரூபவாஹினியிலும் லேக்கவுசிலும் விலாசம் காட்டினார்கள். சிவில் நிர்வாகத்தை நடத்த சிங்கள அதிகாரிகளும், ஊழியர்களும் வந்திறங்கினார்கள். இன்னும் தமிழர்களுக்கு புனர்வாழ்வும் புனருத்தாரணமும் செய்ய 10,000 திசாநாயக்காவின் பரிவாரங்களும் மங்களசமரவீரவின் வானரங்களும் வரப் போகிறார்கள். யாழ்ப்பாணத்தில் குறைந்தது 10,000 சிங்களப் படையினராவது இனக்கலப்புச் செய்ய வேண்டுமென இரகசிய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சிங்கள மயமாக்கல் அரசு ஆசீர்வாதத்துடன் நடைபெறுகின்றது. ஒட்டுமொத்தமாக யாழ்ப்பாணம் இப்போது ''யாப்பாபட்டுன'' வாகிவிட்டது. இங்கு தமிழர்களின் நிலை என்ன? சுற்றிவளைப்புகள், கைதுசெய்யப்படல், சித்திரவதை, காணாமற்போதல், தலையாட்டிகள், வெள்ளைக் கொடியேற்றல் போன்ற சகல அவமானங்களும், கொடுமைகளும், அழிவுகளும்தான் மிஞ்சின. அநுராதபுரத்திற்கு தமிழர்கள் படையெடுத்து புலிக்கொடியேற்றி சிவில் நிர்வாகம் நடத்த முற்பட்டிருந்தால் சிங்களவர்களுக்கும் சிறிமா புத்திரிக்கும் எப்படியிருந்திருக்கும்?

இந்நிலையில்தான் ஸ்ரான்லி வீதியில் தமிழ் இளம்பெண் வெடித்துச் சிதறினாள். குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் 8பேர் மட்டுமே காயமடைந்தவர்கள் 32 பேர் அப்படியாயின் ஏனைய கொல்லப்பட்ட காயமடைந்தவர்கள்? என்ற வினா எழுகின்றது? அமைச்சரின் பரிவாரங்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் கைங்கரியத்தால் ஏற்பட்டவையாகும். மனித குண்டு உடனடியாக பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு கண்டனத்திற்குள்ளாக்கப்பட்டது. ஆனால் அமைச்சரின் வானரங்களின் துப்பாக்கிச் சூட்டைப் பற்றியோ பின்பு நடைபெற்ற சுற்றிவளைப்புக்கள், கைது, சித்திரவதை, பாலியல் வல்லுறவு, காணாமற்போதல், பற்றியோ எவரும் மூச்சுக்காட்டவில்லை.

சிறீலங்காவைப் பொறுத்தவரையில் 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ்த்தேசிய இனத்தின் ஆணிவேர்களை அறுத்தெறிவதில் சிங்கள இனவாத அரசே முன்னின்றது. சிறீலங்கா அரசுதான் தமிழர்களின் தாயக பிரதேசத்தை பறித்து சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தியது முதல் தனிச்சிங்களச் சட்டம் தொடக்கம் காலத்துக்குக் காலம் இனப்படுகொலைகளைச் செய்வதும் இன்று இருக்க இடமில்லாமல் தமிழனை கலைத்துக் கலைத்து கொல்லுவதுவரையேயான அனைத்தையும் செய்தது. இங்கு அரசாங்கம்தான் பயங்கரவாதத்தை உருவாக்கியது, அதனைக் கட்டவிழ்த்துவிட்டதும் அதன் உச்சக்கட்டமாக தமிழர்கள் இருப்பிழந்து அழிந்து போவதும் சிங்கள பௌத்த பேரினவாத அரசபயங்கரவாதத்தினாலேயே. தமிழர்களின்மீது பேயாட்சி செலுத்தும் இந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசு பயங்கரவாதத்திலிருந்து தப்பிக்கொள்வதற்காக ''போராடினால்தான் வாழ்வு'' என்ற சாள்ஸ் டாவினின் கோட்பாட்டுக்கிணங்க தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு தற்பாதுகாப்பு தர்மயுத்தத்தையே தமிழர்கள் நடத்துகிறார்கள். அரசபயங்கரவாதத்திற்கும், தர்மயுத்தத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை ஒடுக்குபவனுக்கும் ஒடுக்கப்படுபவனுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை அழிப்பவனுக்கும் அழிவிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்பவனுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

அமெரிக்க சுதந்திரத்திற்காக போராடிய ஜோர்ஜ் வோசிங்டனிலிருந்து லெனின், சாள்ஸ்டிகோல், மாவோ என நெல்சன் மண்டேலா வரை தமது மக்களின் விடுதலைக்காக போராடிய அனைவருமே பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்கள்தான்.

இவ்வாறான போராட்டங்களை அடக்குமுறை அரசுகள் பயங்கரவாதம் என்றுதான் கூறி வந்தன. எனவே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் இவ்வாறான பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள் எழுவது வழமையே இவற்றுக்கெல்லாம் அஞ்சி துன்பங்களையும், துயரங்களையும், அவலங்களையும் மட்டும் போராட்ட வாழ்க்கையில் ஏற்றுக்கொள்வது நாம் அழிவதற்கு சமமாகும்.

எது எவ்வாறாக இருந்தாலும் சிங்களப் பேரினவாதப் பூதம் தமிழர்களிற்கெதிரான யுத்தத்தை அதிகரிக்க அதிகரிக்க மறுவளமாக சிங்கள மக்களின் மீது பெருஞ்சுமைகளையும், சோகத்தையுமே ஏற்படுத்தும். ''தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்பது தமிழில் உள்ள முதுமொழி. அதுபோல சிங்கள இனவாதம் தமிழர்களின் மீது எதனை திணிக்கிறதோ அதுவேதான் அதற்கும். மனித வாழ்வியக்கத்திற்கும் அடிப்படையான நியூட்டனது விதியானது விடுதலைப் போராட்டத்திலும் உண்மைகளை உணர்த்தும் ஒரு விதியாக மாறியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வரலாறானது சிங்களப் பேரினவாதத்திற்கு தகுந்த நேரத்தில் இதனை உணர்த்தும் என்பது திண்ணம். ○

## புளுகுணாவி அதிரடி...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக, கொல்லப்படும்போது, மட்டக்களப்பில் நிறுத்தப்பட்டுள்ள, தரைப்படையின் 3 ஆவது டிவிசன் படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் றிப்பிரிசுடன் இணைந்து, புளுகுணாவித் தாக்குதலையடுத்து முன்னெடுக்கப்பட்ட ''பாடும் மீன்'' படையெடுப்பினை வழிநடாத்திக்கொண்டிருந்த அவர் –

1990 இல், புலிகளின் கைகளிலிருந்த பல பகுதிகளை மீளக் கைப்பற்றியதுடன், தனது பொறுப்பின் கீழிருந்த ''யால'' மற்றும் ஏனைய பிரதேசங்களில் புலிகளை முறியடிக்கும் நடவடிக்கைகளிலும், 'S.T.F கொமோண்டோ'க் களைவழிநடாத்தி குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகித்தார்.

பிரிட்டனின், 'கீனி மீனி சேவை' (Keeni - Meeni Service - KMS) விசேட படைக்காகப் பணியாற்றும், SAS (Special Air Services) இன் மூத்த உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டு, பாகிஸ்தானினதும், இஸ்ரேலினதும் சிறப்புப் பயிற்சிகளால் வளைந்தெடுக்கப்பட்டதுடன் பாகிஸ்தானின் தனித்துவப் போர்ப் பயிற்சிப் பிரிவினரால் பயிற்றுவிக்கப்பட்ட சிறிலங்காவின் மிகச் சில போரியல் நிபுணர்களுள் ஒருவருமான DIG சகபந்து அவர்கள் –இறக்கும்போது, தமிழீழப் போரில் கொல்லப்பட்ட S.T.F.இன் அதியுயர் தளபதி என்ற பெருமைக்குரியவராகினார்.

❋ ❋

தமிழர் தாயகத்தின் மீதான ஆக்கிரமிப்பு - அடக்குமுறைப் போரிற்கு இறுதியாகத் தலைமையேற்ற, சிங்களத்தின் இன்றைய சந்திரிகா அனுருத்த அரசாங்கம், கடந்த ஆண்டில், அதிசிறந்தது எனத் தான் கருதிய இராணுவ மூலோபாயம் ஒன்றை இனவாதப் போரின் களத்திலிறக்கியது.

கிழக்கில் தமது பிடியைச் சற்றுத் தளர்த்தி அந்தப் பலத்தையும் வடக்கில் பிரயோகித்து, புலிகளின் மைய நிர்வாக ஆதிக்கத்தையும் – நிலக் கட்டுப்பாட்டையும் கொண்டுள்ள வடக்கில் அவர்களை வென்று, அதன் வாயிலாகக் கிழக்கிலும் அவர்களை முறியடித்து, முடிவாகத் தமிழீழப் போரையே தோற்கடித்து விடலாம் என்பதுவே அந்தப் புதிய நுட்ப தந்திரோபாயமாகும்.

இன யுத்தத்தில் தனது புதிய மூலோபாயத்தைக் கையாளப் புறப்பட்ட சிங்கள ஜெனரல், வட போரரங்கில், புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பகுதிகள் மீது பெருமெடுப்பிலான ஆக்கிரமிப்புப் படையெடுப்புகளை ஆரம்பித்து, அவற்றைத் தொடராக நிகழ்த்தி வந்த ''றிவிரச - 1''ற்குப் பின்னான காலத்தில் –

எதிரியின் மூலோபாயத்தை முறியடிக்கும் எதிர்மூலோபாயமாகவும், போராட்டம் பிரவேசித்துவிட்ட புதிய கட்டத்தின் தன்மைக்கு பொருத்தமானதாகவும், தமிழீழ மக்களின் சுதந்திரத்தை நோக்கிய போரின் இறுதி நகர்வாகவும்–

போர்க்களத்தில் புதிய போருபாயம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவந்து, காலத்தின் தேவையை நிறைவேற்றத் தீர்மானித்தார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

வரலாற்றுப் பழியைச் சுமக்கக்கூடிய பெரும் இராணுவத் தோல்விகளுக்கும், அதன் உடனடி – நீண்டகால விளைவுகளான பெரும் அரசியற் தோல்விகளுக்கும் சிங்களத் தலைமையைச் சொந்தக்காரர்களாக்குவதுடன், 'சளையாது – பணியாது – போராடி விடுதலையை வென்றெடுத்த மக்கள் என்ற சரித்திரப் பெருமையைத் தமிழர்களின் தலைகளில் சூடுவதற்காகவும், தலைவர் பிரபாகரன் அவர்கள் -

தமிழீழ யுத்தத்தின் இரு பிரதான பொருதரங்கங்களான வடக்கிலும், கிழக்கிலும் –

அந்தந்தத் தளப்பிராந்தியங்களின் இராணுவ, அரசியல், புவியியல், குடியியல் தன்மையியல்புகளுக்கு ஏற்றதான –

கெரில்லா யுத்த முறையின் இருவேறு பரிமாண வகைப்பட்ட போர் வடிவங்களை, ஒரேசமநேரத்தில் நடைமுறைப்படுத்தத் தலைப்பட்டார்.

நிலத்தைத் தக்க வைத்திருப்பதில் குறைந்தளவு அக்கறையைச் செலுத்தி, எதிரி முன்னேற இடம்கொடுத்து ஆட்பலத்தைத் தக்க வைத்து, திட்டமிட்டுப் போரணிகளை ஒருங்கிணைத்து நகர்த்தி, எதிரியின் பாரிய இலக்குகளின் மீது ஒருமுகப்படுத்தித் தாக்கிப் படுநாசங்களை உண்டுபண்ணும் திடீர் பெருமெடுப்பு நடவடிக்கைகளை வடக்குப் போரரங்கிலும் –

நிலத்தைத் தக்க வைப்பதை முழுமையாகவே கைவிட்டு, திகைப் பூட்டும் அதிரடிகளைப் பரவலாகத் தீவிரப்படுத்தி, போர் வெறுக்கும் விரக்திகர மனநிலைக்குள் சிங்களச் சிப்பாய்களைத் தள்ளித் தோற்கடிக்கும் தொடரடிகளைக் கிழக்குப் போரரங்கிலும் – தலைவர் அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

முல்லைத்தீவு வென்றெடுத்த பெருவெற்றித் தாக்குதலும்; 'சத்ஜய'வை எதிர்கொண்ட தந்திரோபாய சமர்க்களமும், ஆனையிறவு–பரந்தன் அழித்தொழிப்புப் பேரடியும் கிழக்கில் பரவலாகத் தொடரும் வெற்றிகர அதிரடிகளும் – அவர் நேரடியாக நெறிப்படுத்திச் செல்லும் மூலோபாயத்தின் இதுவரைகாலப் பெறுபேறுகள்.

– தி. இனியவன் ○



## எதில் நம்பிக்கை கொள்ள?

எப்படி மறத்தல் கூடும்

எல்லாவற்றையும்
எங்கே புதைத்திட முடியும்

யுத்த கின்னரர் சந்நதமாடிய
அப்பொழுதுகளை ?

வீதிகள் எல்லாம் பீதியிலுறைய
திகிலுடன் கழிந்த அந்தக் கணங்களில்
மரணம்
ஒவ்வொரு முற்றத்திலும் வந்துநின்றதே!

கைது
சித்திரவதை
காணாமற்போதல்
கேள்விகளையும் நியாயங்களையும்
புறந்தள்ளியபடி
கடையிலோ, தெருவிலோ,
பள்ளியிலோ, கோவிலிலோ
அன்றி வீட்டிலோ விளையாட்டரங்கிலோ கூட
சுடப்பட்டிருந்தது நம் வாழ்க்கை.....

எங்கும் சாவின் ஓலம் ஒலித்த அக்கணங்கள்.....

பிள்ளையை இழந்த தாய்.....
அண்ணனை இழந்த சோதரன்.....
கணவனை இழந்த மனைவி.....
தந்தையை இழந்த பிள்ளைகள்.....

இவ்வாறு ஒரு வாழ்வு இருந்ததை
என்றும் மறத்தல் நியாயமோ?

பதின்மூன்று ஆண்டுகள் போயினவாயினும்
ரணம் இன்னும் நெஞ்சுள் வலியெடுக்கிறது

வெலிக்கடைச் சிறையின் கதவின் கீழே
வடிந்த குருதியின் ரத்தவாடை ...
ஞாபகத்தின் அடுக்குகளில் அழிந்திடவில்லை

பூவரசங்குளம்.....
கொக்கட்டிச்சோலை.....
குமுதினிப்படகு.....
குருநகர்.....
நவாலி.....
நாகர்கோவில்.....
என்று எத்தனை படுகொலைகள்.....

உப்புக்கும் உரத்துக்கும் செப்புக்கும்
சின்னக்குழந்தையின் பாலுக்கும் கூட மறுப்பு.....
கத்தி, துவக்கு, சப்பாத்து
சாவோலம், வெறுமை, இருள்... –
ஆரம்பதித்த துன்பியலில்
நொருங்குண்டு நொருங்குண்டு
அழிந்தது நம் கதை.

கனவிலும் நனவிலும்
வாளேந்தி நின்றது சிங்கம்
காவுகொண்ட ஊர்களிலிருந்து
சுவாலைகள் எழுந்தன

பேய்கள் பற்றிய கதைகளே எங்குமிருந்தன

இன்றோ பேய்கள் உருவம்மாறின
கைகுலுக்கிக் கொண்டன;
புன்னகை புரிந்து
பூச்செண்டேந்தி
கண்களைச் சிமிட்டி
காதலாகிக் கசிந்துருகின

துப்பாக்கி
சப்பாத்து
சீருடை
தொப்பி
முட்கம்பிவேலிகளும் தடையரண்களும் கொண்டு
ஊர்மனைதோறும் வாளேந்திய சிங்கம் நிற்கிறது

தலைகவிழ்ந்து
இறங்கி ஏறி
நில்லென்றால் நின்றும்
செல் என்றால் சென்றும்
வாழ்தல் ஒரு சாத்தியமா?

எல்லாவற்றையும் மறந்து
எவற்றில் நம்பிக்கை கொள்வது?

துன்பத்தின் அடைவில்
மீண்டுமொரு காலத்தைப் புதைத்தல் தகுமோ?

– கருணாகரன் ○

## ஆனையிறவு - பரந்தன் 'அழித்தொழிப்புத் தாக்குதல்'

# ஓர் உயர் பரிமாண கெரில்லா நடவடிக்கை

குடாநாட்டிற்கும் – வன்னி நிலப்பரப்பிற்கும் இடையிலிருந்த ஆனையிறவு, மற்றும பரந்தன், படைத்தளங்களின் கூட்டு வலயம் மீது ஜனவரி 9 ஆம் நாள் புலிகள் நிகழ்த்திய பெரும் அதிரடித் தாக்குதலானது –

எதிரியின் பாரிய ( படைக்கல + வெடிப்பொருள் ) சுடுசக்தியை அழித்தொழிப்பதற்காக மட்டுமல்லாமல், அடுத்த படையெடுப்பு ஒன்றிற்கான பெருமெடுப்பிலான தயார்ப்படுத்தலில் முழுமையாக ஈடுபட்டிருந்த எதிரியின் முன் முனைவை முறியடிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

நுட்பமான திட்டம் வரைந்து, சரியான காலததைத் தேர்வு செய்து படையணிகளை நகர்த்திய தலைவர் பிரபாகரன் அவர்களின் கண்காணிப்பின் கீழ், தளபதிகளால் வழிநடாத்தப்பட்ட புலிவீரர்கள், கணிக்கப்பட்டதற்கும் குறைவான நேர எல்லைக்குள் இலக்குகளை வீழ்த்தி, தாக்குதலின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர், களத்திலிருந்து வெளியேறினர்.

கடத்தல் காரர்களைப் பிடிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் சோதனை நிலையம், 83 இற்குப் பின் இராணுவத் தடை முகாமாகி, 90 இறகுப் பின்னான ஆறு வருட காலத்தில் வெற்றிலைக் கேணி – கட்டைக்காடு – இயக்கச்சி – பரந்தன் – கிளிநொச்சி எனப் படிப்படியாக விரிவாகி, பெரும் பல்கூட்டுப் படைத்தளத் தொகுதியாக ( Military Complex ) உருப் பெற்றது.

தமிழீழப் போரின் எல்லாக் காலங்களிலுமே, வட போரரங்கின் களநிலவரத்தைத் தீர்மானிக்கும், தவிர்க்க முடியாத சக்தியாகவும் குறிப்பிடத்தக்க அரசியற் தாக்கங்கள் நிகழ்வதற்கு வல்லமை பொருந்திய காரணியாகவும், ஆனையிறவை மையமாகக் கொண்ட படைத் தளத்தொகுதி விளங்கி வருகின்றது.

யாழ்ப்பாணக் கடல்நீரேரியைக் குறுக்கறுக்கும் தனியொரு நிலவழிப் பாதையை மட்டுமேயுடைய குடாநாட்டின் நுழைவாயிலில் அது பெற்றிருக்கும் அமைவிடம் தான், அத்தகைய முதன்மைப் பாத்திரதை அதற்குக் கொடுத்திருக்கிறது.

கடந்த 13 வருட யுத்தத்தில், வட போரரங்கில், இருவேறு பரிமாணப்பட்ட, இரு வேறு பணிகளை, இரு வேறு காலகட்டங்களில் ஆனையிறவுத் தளம் ஆற்றியது; ஆற்றிவருகின்றது.

முன்னையதை – முற்றுகைக்கான முதன்மைத் தடைத்தளம் எனலாம்; பின்னையதை – நடவடிக்கைக்கான முன்னரங்கத் தாக்குதற் தளம் எனலாம்.

குடாநாட்டில் புலிகள் நிலக் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த முற்காலத்தில், சிங்களத் தலைமை கையாண்ட குடாநாட்டை முற்றுகையிட்டுப் பணியவைக்கும் தந்திரோபாயத்தின் பிரதான செயலாக்கக் களமாக, குடாநாட்டின் வாயிற் தடுப்பாக, ஆனையிறவுத் தளம் இருந்தது. பெருப்பித்து, பலப்படுத்தி, வெற்றிலைக்கேணிக் கடல் வரை விரிவாக்கி, கொம்படி – ஊரியான் வழிப் பாதையையும் மறித்து, குடாநாட்டுக்கான தரைப் பாதைகளை இறுக மூடும் ஒரு தடைமுகாமாகவே ஆனையிறவை எதிரி வைத்திருந்தான். வெளியிலிருந்து உள்ளுக்கும், உள்ளிருந்து வெளியிற்கும், புலிகளின் நகர்வுகளை நிறுத்துவது மட்டுமே அதன் பணி. 'யாழ்தேவி' நடவடிக்கையைத் தவிர வேறெந்தப் படையெடுப்புத் தாக்குதல் முயற்சிகளையும் எதிரி ஆனையிறவிலிருந்து எடுக்கவில்லை. அப்போது, வடக்குப் போரரங்கின் பிரதான படையெடுப்பு முன்னரங்கக் களமாகப் பலாலிப் படைத் தளத் தொகுதியே திகழ்ந்தது.

குடாநாட்டிலிருந்து பின்வாங்கிய புலிகள், வன்னி நிலப் பெரும் பரப்பின் நிலக்கட்டுப்பாட்டைத் தொடர்ந்தும் கொண்டிருந்த பிற்காலத்தில், முற்றுகைத் தடைத் தளம் என்ற தனது முன்னைய பணியிலிருநது, யுத்தத்தின் முன்னரங்கத் தாக்குதற் தளமாக ஆனையிறவு மாற்றப்பட்டது. அதாவது - குடாநாட்டிலிருந்த தமது செயற்பாட்டு மையத்தையும, பெரும் போரணிகளையும் புலிகள் வன்னிக்கு நகர்த்தியதன் பின்பு – நிர்வாக ஆதிக்கத்தைச் செலுத்தித் தமது மையச் செயற்பாட்டுத் தளப் பிராந்தியமாகப் புலிகள் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் நிலப் பகுதிகளை மீளவும் ஆக்கிரமிப்பதற்கான சிங்களத்தின் பிரதான படையெடுப்புப் பொருது களம், பலாலியிலிருந்து ஆனையிறவுக்கு மாறியது. பீரங்கிக் கவச வண்டிகள்(Main Battle Tanks) கவசத் துருப்புக்காவிகள் (Armou – red Personnel Careers), 'ஆரில்லறி' றெஜிமென்ரின் பிரிவுகள் (Batteries of Artillery Regiment), பல பத்தாயிரம் எறிகணைகள் மற்றும் வெடிப்பொருட்களைக் கொண்ட களஞ்சியங்கள் ( Caches of ammunition dumps ) என, பாரிய சமர்க்களங்களுக்குத் தேவையான போர்த் தளபாடங்கள் ஆனையிறவில் குவிக்கப்பட்டன. அனைத்து வளங்களும் ஒருங்கு இணைக்கப்பட்டு, முன்கள– பின்கள ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, மூர்க்கமான மரபுமுறைச் சமர் அரங்குகளைத் திறக்கத் தயாரான உச்சபலமுடையதாக ஆனையிறவுத் தளம் உருவெடுத்தது.

ஆனையிறவிலிருந்து 3 கட்டங்களாக 'சத்ஜய' வில் படையை நகர்த்தி, கிளிநொச்சியைக் கைப்பற்றி, தன் துருப்புக்களைப் பலமாக நிலைகொளள வைத்த சிங்களத்தின் படைத்துறைத் தலைமை

ஆனையிறவிலிருந்தான அடுத்த– முக்கிய - பெரும் படையெடுப்பு ஒன்றிற்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே, புலிகளின் 'அழித்தொழிப்புத் தாக்குதல்' நிகழ்த்தப்பட்டது. ஆனையிறவுப் படைத் தளத்தொகுதியின் தென் பகுதியும், கிளிநொச்சிப் படைத் தளத் தொகுதியின் வட பகுதியுமே புலிகளின் தாக்குதல் வலயமாகும்.

7 ஆவது பிறிகேட் நிறுத்தப்பட்டுள்ள ஆனையிறவுத் தளத்தையும், 19ஆவது பிறிகேட் நிறுத்தப்பட்டுள்ள வெற்றிலைக்கேணித் தளத்தையும் உடைய ஆனையிறவுப் படைத்தளத் தொகுதி, மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகராவின் கட்டளைப் பணிப்பின்கீழ், தடைமுகாமிலுள்ள ''2 ஆவது சிறப்புப் பணிப் படைப்பிரிவு'' ( Task – Force – 2 ) மையச் செயலகத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்றது.

10 ஆவது பிறிகேட் நிறுத்தப்பட்டுளள பரந்தன் தளத்தையும், 541ஆவது 542ஆவது, 543 ஆவது பிறிகேட்கள் நிறுத்தப்பட்டுள்ள கிளிநொச்சியைச் சூழவுள்ள பகுதித் தளங்களையும் கொண்ட கிளிநொச்சிப் படைத் தளத் தொகுதி, பிரிகேடியர் வசந்த பெரேராவின் கட்டளைப் பணிப்பின் கீழ், கிளிநொச்சியிலுள்ள 54ஆவது டிவிசன் ( 54 DIV ) மையச் செயலகத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்றது.

புவியியல் ரீதியாக, 'யாழ்ப்பாணக் கடல்நீரேரியின் இருபுறங்களிலும் – குடாநாட்டு நிலப்பரப்பையும் வன்னி நிலப்பரப்பையும் உள்ளடக்கியதாக – அமைவிடத்தைக் கொண்டுள்ள ஆனையிறவுத் தளத்தின் வன்னி நிலப்பகுதி மீதும் –

அதன் தொடராகப் பரந்தன் சந்திவரை நீளும் பரந்தன் தளத்தின் மீதுமே, புலிகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் வலயத்திற்குள் விஜயபாகு றெஜிமென்ரின் 2 அல்லது 3 பற்றாலியன்களும், சிங்க றெஜிமென்ரின் 1 பற்றாலியனும் நிலைகொண்டிருந்தன. இவற்றில், விஜயபாகு றெஜிமென் ஒரு பற்றாலியனாலும், சிங்க றெஜிமென்ரின் ஒரு பற்றாலியனாலும் பாதுகாக்கப்பட்ட மிகப்பின் பகுதிக்குள் –ஆனையிறவுத் தளத்தில் – 'ஆரில்லறி' றெஜிமென்ரின் சுடுகலப் பிரிவுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனையிறவு சந்தையடி முகாமே 'ஆரில்லறி' சுடுதளமாகும். உயர்ந்த பெரும் மண் அணை அரணுக்கு உள்ளே 122 மில்லி மீற்றர் ஆரில்லறிகள் 8 ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. தென்மேற்குத் திசை நோக்கி இரண்டும், தெற்குத் திசை நோக்கி மூன்றும், தென் கிழக்குத் திசை நோக்கி மூன்றுமாக அவை நின்றன. அவைக்குப் பின்னால், வேறாக, 130 மில்லி மீற்றர் 'ஆரில்லறி' கள் இரண்டும், 122 மில்லி மீற்றர் 'ஆரில்லறி' ஒன்றும் என மேலும் மூன்று – எந்தத் திசை நோக்கித் தாக்கவும் தயாரான வாய்ப்புகளுடன் – தென் திசை நோக்கியதாக நிறுத்தப்பட்டிருந்தன. அத்தோடு– சுடுவதற்குத் தயார் செய்யப்பட்ட நிலையிலும் தயார் செய்வதற்கு ஆயத்தமான நிலையிலும் ஆயிரக்கணக்கான எறிகணைகள் சுடுதளத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

இதற்கு அடுத்திருந்த பாடசாலை முகாம், 'ஆரில்லறி' சுடுதளத்திற்கான முழுமையான விநியோகத்தைச் செய்யும் வெடிப்பொருட் களஞ்சியமாகும். கிளிநொச்சிப் பகுதி மீது நிகழக்கூடிய எதிரியின் தாக்குதலொன்றை எதிர்கொள்ளப் போதுமான அளவுக்கும், திட்டமிடலிலிருந்த அடுத்த பெரும் படையெடுப்பிற்குத் தேவையான அளவுக்கும் எறிகணைகள் அங்கு சேமிக்கப்பட்டிருந்தன. அவை பல பத்தாயிரக்கணக்கானவை என நம்பமுடிகின்றது.

மண் அணைகள், முட்கம்பி வேலிகள் எனத் தம்மைச் சுற்றி வழமையான பாதுகாப்பு அம்சங்களுடனிருந்த இந்தச் சுடுதள, களஞ்சிய முகாம்களுக்குப் பாதுகாப்பளித்து –

பெரிய உப்பள, சுற்றுலா விடுதி முகாம்களிலும், மேற்கே நீரேரி வழியாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க சின்ன உப்பள முகாமிலும், கிழக்கே நிலப்பகுதியூடாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க தட்டுவன்கொட்டி அம்மன் கோவிலடியில் இரண்டு மினிமுகாம்களிலும், மேற்கில் ஒரு கிலோ மீற்றருக்கப்பாலும், கிழக்கில் இரண்டு கிலோ மீற்றருக்கப்பாலுமுள்ள முன்னனி வரிசைக் காப்பரண்களிலுமாக ஆயிரத்திற்கும் குறையாத துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.


இவ்வாறாக, ஆழமான – பிரமாண்டமான – இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துவம்சம் செய்து நுளைந்த புலிவீரர்கள், பீரங்கிச் சுடுதளத்தையும், வெடிப்பொருட் களஞ்சியத்தையும் கைப்பற்றி முழுமையாக நிர்மூலம் செய்தனர். தாக்கப்பட்டவர்களுக்குத் துணையாகத் தடைமுகாமிலிருந்து விரைந்தவர்களைத் தாக்கி, ஒரு 'ராங்க்'கையும் அழித்தனர்.

இதற்கிடையே – கிளிநொச்சிப் பகுதி இராணுவநிலைகளை நோக்கியும், 'TF – 2' தலைமையகமான தடைமுகாம் மீதும், கைப்பற்றிய எதிரியின் 'ஆரில்லறி'களாலேயே தாக்கி –



ஆனையிறவு - பரந்தன் களம்: விழுப்புண்ணேந்திய தோழியை களத்திலிருந்து ஏந்திவரும் தோழியர்.






தடைமுகாமிலிருந்த பிரதான வெடிப்பொருட் களஞ்சியத்தை வெடித்து எரியச்செய்து அழித்தனர். இந்த 'ஆரில்லறி'த் தாக்குதலின்போது, அங்கு தரித்திருந்த 7 இற்கும் குறையாத யுத்த "ராங்க்'குகளும் தகர்ந்தழிந்ததாக நம்பகமாக அறியக்கிடைக்கின்றது. இந்த தொகை 18 இற்கும் அதிகம் என படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'வீரகேசரி' (12.01.1997) கூறியது.

மறுபுறத்தே, ஆனையிறவுத் தளப்பகுதி எதிரிக்குக் கிளிநொச்சியிலிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காக –

உமையாள்புரம், இரசாயனத் தொழிற்சாலை, குமாரபுரம் முகாம்களையும், பிரதான வீதிக்கு மேற்கில் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலும், கிழக்கில் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுமுள்ள முன்னணி வரிசைக் காப்பரண்களையும் கொண்டதாக, ஆயிரத்திற்கும் குறையாத துருப்புக்களுடனுமிருந்த பரந்தன் தளத்தையும் தாக்கிய புலிகள் –

பரந்தன் சந்திப்பகுதியில் ஒரு 'ராங்க்'கையும், ஒரு Buffle கவச வண்டியையும் தாக்கியழித்ததுடன், 10 ஆவது பிறிகேட் மையச்செயலக உமையாள் புரம் முகாமிலிருந்து 120 mm மோட்டார்கள் மூன்றை முழுமையாகவும், மேலும் இரண்டை சேதப்பட்ட நிலையிலும் கைப்பற்றினர்.

ஒட்டுமொத்தமான இந்த நடவடிக்கையில் புலிகளின் 150 வீரர்கள் களப்பலியாகினர். படையினர் தரப்பில் 300 பேர் வரையானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும், கணிசமான தொகை வெடிப்பொருட்களையும் புலிகள் கையகப்படுத்தினர்.

தமிழீழப் போரில், இந்தத் தாக்குதலின் போரியல் கனபரிமாணம் புதியது; இது ஒரு துணிகரமான முயற்சி.

1991 ஆம் ஆண்டு தாக்க முற்பட்டுத் தோல்வியடைந்த அதே தளத்தை, ஐந்தாண்டுகளின் பின்பு, இன்று, அன்றையை விடப் பெரும் பலம் பொருந்திய நிலையில் இருந்த போதும் வெற்றிகரமாகத் தாக்க முடிந்தது என்பது, எதிர் காலத்தின் எதிர்வு கூறல்.

கெரில்லாப் போர் முறையின் உயர் பரிமாண தாக்குதல் வடிவத்தில், விடுதலைப் புலிகளின் படையமைப்பு கண்டுள்ள இன்னொரு படிநிலை வளர்ச்சியின் வெளிப்பாடு இது.

'றிவிரச' படையெடுப்பிற்கு முன்னர் பலாலித் தளத்திலிருந்த அதே பலம், அல்லது அதை விடவும் கூடுதல் பலம், ஆனையிறவில் குவிக்கப்பட்டிருந்தது என்பதுவே, அந்தத் தளத்தின், பிரமாண்டமான தோற்றப்பாட்டைக் கற்பனையிலேயே கணித்துக்கொள்ளப் போதுமானது.

ஒருபுறம் கிளிநொச்சியில் 22 சதுர கிலோ மீற்றர் வரையான பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த 4000 வரையான துருப்புக்கள், மறுபுறம் ஆனையிறவிலிருந்து வெற்றிலைக் கேணிக் கடல் வரை நீளும் பெரும் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த இன்னும் சில ஆயிரம் படையினர் என –

முழுமையான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட ஒரே தொடராக நீளும் பாரிய பல்கூட்டுப் படைத் தளத் தொகுதியினுள் 2000 வரையான துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்த 25 சதுர கிலோமீற்றர் வரையான நடுப்பகுதி வலயத்தை மட்டும் தேர்வு செய்து, ஊடுருவித் துண்டறுத்துத் தாக்கி பெரும் அழிவைக் கொடுத்ததென்பது, புலிகளால் ஈட்டப்பட்ட ஒரு மாபெரும் இராணுவ சாதனையே தான்.

எனவே தான், 'சண்டே ரைம்ஸ்" இதழின் போர்த்துறை ஆய்வாளர் இக் பால் அத்தாஸ் அவர்கள், "அகன்ற பெரும் பரப்பில் அமைக்கப்பட்டிருந்த இந்த தொடர் படைத்தளங்களின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல், 13வருட யுத்தத்தில் சிங்களப்படைக்கு ஏற்பட்ட ஒரு வடு" எனச் சொல்கின்றார்.

அழிக்கப்பட்ட பீரங்கிகளும், வெடிப்பொருட்களும் மீட்டெடுக்கப்பட்டிருந்தால், தமிழர் போராட்டத்தில் அற்புதங்கள் நிகழ்ந்திருக்கும். அவை தமக்குக் கிடைக்கவில்லை என்பது எம் மக்களின் ஆறாத ஆதங்கம்.

ஆனால், புவியியல் மற்றும் இராணுவ காரணங்களால் அவற்றைக்கொண்டுவரமுடியாமல் போகலாம் என்பது திட்டமிடலின் போதே உணரப்பட்டதால் தான், அழித்தொழிக்கும் வழிவகையும் செய்யப்பட்டது.

அத்தோடு – ஆனையிறவிலிருந்து எதிரி ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த பெரும் படையெடுப்பு ஒன்றைத் தடுப்பதற்காக, அவனது மிகப்பெரும் சுடுசக்தி அவனிடமிருந்து இல்லாமற் செய்யப்பட வேண்டும் என்பதே புலிகளின் அவசர இலக்காகவும் இருந்தது.

அதற்காக, ஆனையிறவிலிருந்து, அல்லது வேறெங்குமிருந்து எதிரி இனிமேல் எந்த ஒரு படை நகர்வையும் எடுக்கமாட்டான் என்பதல்ல.

இப்போது – எந்த முனையிலிருந்தும், எந்த நேரத்திலும் இன்னொரு படையெடுப்பு ஆரம்பிக்கப் படவுள்ளது எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளின் படையணிகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வேளையில் தான், ஆனையிறவு – பரந்தன் தாக்குதலானது, எமது மக்களுக்கு ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையையும், எதிரிகளுக்கு ஒரு சந்தேகமற்ற எச்சரிக்கையையும் கொடுத்துள்ளது.

ஆனையிறவைப் பின் தளமாகக் கொண்டு நகர்த்தப்பட்ட படையெடுப்பின் மூலமாக, ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் பரந்தன் பகுதி கைப்பற்றப்பட்டது என்பதால் –

புலிகளின் பகுதிகளுக்குள் படைகளை நீள நகர்த்தி, அகன்று பரவி நிலைகொள்ள வைக்கும் மூலோபாயம் எதிர்காலத்தில் தோல்வியிலேயே முடியும் என்பது எதிரிகளுக்கான எச்சரிக்கை!

இவ்வாறாக, எதிரிகளின் ஆக்கிரமிப்பு நிலைகள் மீது ஆற்றல் மிகு தாக்குதல்களை நிகழ்த்தும் புலிகள், எதிர் காலத்தில், சிங்கள ஆக்கிரமிப்பை நிரந்தரமாகவே முறியடிப்பர் என்பது எமது மக்களுக்கான உறுதியான, திடமான, நம்பிக்கை! ○

# ஜே.ஆரின் மறைவு தமிழரின் மனப்பதிவு

வே. பாலகுமாரன்



''200 வருடங்களுக்கு மேலாக குடியேற்ற வாதத்தை ஆதரித்த குடும்பத்திலே தோன்றியவர்; இவரது பதவிக்காலத்திலே 37 வேலை நிறுத்தக்காரர் தற்கொலை செய்துகொண்டனர்; 83 யூலை கலவரத்தின்போது மேலும் பலர் பலியாகினர் இவ்வாறு கொல்லப்பட்டோருக்காகவும், எரிக்கப்பட்ட யாழ். நூல் நிலையத்திற்காகவும், இவை எல்லாவற்றிற்குமாக நான் அனுதாபம் தெரிவிகிறேன். தயவுசெய்து குறித்துக்கொள்ளுங்கள் - நானோ எனது கட்சியோ இவரது இறப்பிற்காக வருந்தவுமில்லை; அனுதாபம் தெரிவிக்கப்போவதுமில்லை''

– கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினா.



சிங்களத்தாருக்கு ஜே.ஆரைப் பற்றி பெரிய பெருமை; சருவ தேசம் புகழ் வாய்ந்த தென்னாசியாவின் முதுபெரும் அரசியல்வாதி என்றும், சிங்களத்தின் சாணக்கியர், தவப்புதல்வன் என்றும் பல வாறாக அவர்கள் பாராட்டியே வந்துள்ளனர்! 1940 களில் நேரு, காந்தியோடு இனம் காட்டி, பின் இந்திரா காந்தியோடு மோதி ராஜீவ் காந்திக்கு தண்ணி காட்டி நடுவராக வந்த படையை புலியோடு மோத வைத்து அவரது வார்த்தையில் சொல்வதானால் ''சிங்களத்திற்கு பெரும் உயிரழிவு, நிதிச்செலவு ஏற்படாமல்'' எல்லாவற்றையும் இந்தியா தலையில் கட்டியடித்தவர்; கிழட்டு நரி! என்றும் வியப்பது அவர்கள் வழக்கம்.

கொழும்பிலே, சட்டத்துறையிலே, புகழ்பெற்ற செல்வந்த உயர் குடியிலே, 1906 செப்டெம்பர் 17இல் அவதரித்து, சட்டம் பயின்று, 1940 டிசம்பரில் கொழும்பு மாநகர சபை உறுப்பினராகி 1943 –மேயில் சட்டசபைக்கு களனித் தொகுதி மூலம் தெரிவான பின், 50 வருடத்திற்கு மேலாக ஒரேயொரு தடவையைத் தவிர (1956 – 60), 1989 ஜனவரி – 2 ஆம் திகதி அரசியலிலிருந்து ஓய்வு பெறும் வரை அபூர்வ அரசியல் ஆயுளைக் கொண்டவர்; 15 வருட அமைச்சர் அனுபவம் கொண்டவர்; 1977 – யூலையில் பிரதமராகி 1978 பெப்ரவரியில் நிறைவேற்று ஜனாதிபதியாக அவதாரம் எடுத்து. 1982 இல் மீண்டும் எல்லார் கண்ணிலும் மண்ணைத் தூவி சனநாயகத்தையே றப்பராக வளைத்து இரண்டாம் தடவையும் ஜனாதிபதியாகி மொத்தம் 12 வருடங்கள் நாட்டின் தலைவராக தொடர்ந்திருந்தவர்; 16 – செப்டெம்பர் 1951 ஆம் ஆண்டு சன்பிரான்சிஸ்கோவிலே ''வெறுப்பை வெறுப்பால் அழிக்க முடியாது அன்பாலே தான் அதுமுடியும்'' என புத்தரின் தத்துவத்தையே யப்பானுக்காகப் பரிந்து பேசி அதன் நல்லெண்ணத்தை பெற்றவர். அத்தோடு நிலவுடமையாளர் பிடியிலிருந்த சிங்களப் பொருண்மியத்தை புதிய பொருண்மியப்பாதையில் இணைத்துவிட்ட ''தனியார் துறையின் மகாநாயக்கர்'' என்றும் இதுவரை காலமும் புகழ்ந்து தள்ளினர் சிங்களத்தார்.

எனவே இப்பேர்ப்பட்ட ''தகுதிகளை'' உடைய யூலியஸ் றிச்சர்ட் ஜெயவர்த்தனா சென்ற மாதம் 1 ஆம் திகதி தனது 90 ஆவது வயதில் நண்பகல் 12.15 மணிக்கு மூச்சை நிறுத்தியபின் என்ன நடந்தது? அவரது இறப்பு அவருக்கு மேலும் சிறப்பையல்லவா கொடுத்திருக்க வேண்டும்? ஆனால் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை! அனுதாப அலைக்குப் பதிலாக விவாத அலையே கிளம்பியது; பரிவுக்குப் பதிலாக காழ்ப்பும், வெறுப்புமே பீறிட்டது; நாட்டில் துக்கதினம், விடுமுறைதினம் எதுவும் அறிவிக்கப்படவில்லை; பதிலாக விடுமுறை இல்லையென்றே அறிவிக்கப்பட்டது; ஜனாதிபதியின் வேண்டாவெறுப்பான 4 வரி அனுதாபச் செய்தி 2 நாள் கழித்தே வெளியிடப்பட்டது; படைகளின் பிரதம தளகர்த்தராக இருந்தவருக்கு சாதாரண படைமரியாதை கூடக் கிடைக்கவில்லை; இந்தியா பேருக்கு அனுப்பிய அமைச்சரைத்தவிர வேறெந்த வெளிநாட்டுத் தலைவரும் வரவில்லை; எந்தவொரு சருவதேச சஞ்சிகையும் இறப்பைப் பெரிதாகக் கணிக்கவில்லை; அட்டையில் படம் போடவில்லை; 1987 களில் ஜே. ஆரை சுற்றி வந்த ''புரொண்ட் லைன்'' ராம் கூட ஒருவரி எழுதவில்லை.

இத்தோடு அவமரியாதை முடியவில்லை; எந்த மாநகரசபையில் தனது அரசியல் வாழ்வை ஜே.ஆர் ஆரம்பித்தாரோ, அங்கு என்ன நடந்தது? இதுவரை எந்தவொரு தலைவருக்கும் கிடைக்காத ''சிறப்பு மரியாதை'' அங்கேதான் கிடைத்தது! ஐ.தே. கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் கொழும்பு மாநகர சபை ஜே. ஆருக்கு அனுதாபம் தெரிவிக்க பொதுச்சபையை கூட்டியபோது, மாநகரசபையின் ஒரேயொரு N.S.S.P கட்சி உறுப்பினரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினா புயலையே கிளப்பினார். ''200 வருடங்களுக்கு மேலாக குடியேற்ற வாதத்தை ஆதரித்த குடும்பத்திலே தோன்றியவர்; இவரது பதவிக் காலத்திலே 37 வேலை நிறுத்தக்காரர் தற்கொலை செய்து கொண்டனர்; 83 யூலை கலவரத்தின் போது மேலும் பலர் பலியாகினர். இவ்வாறு கொல்லப்பட்டோருக்காகவும். எரிக்கப்பட்ட யாழ். நூல்நிலையத்திற்காகவும், இவை எல்லாவற்றிற்குமாக நான் அனுதாபம் தெரிவிக்கிறேன். தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள் - நானோ எனது கட்சியோ இவரது இறப்பிற்காக வருந்தவுமில்லை; அனுதாபம் தெரிவிக்கப் போவதுமில்லை!'' என்றார்.

இதற்கெல்லாம் என்ன காரணம்? பெருந்தன்மையற்ற குறுகிய சுய நோக்கம் கொண்ட குள்ளநரிப் புத்தி, எப்போதும் முதலாளிய நலன் பேணி சனநாயகத்தை கேலிக் கூத்தாக்கிய திமிர், என நீளும் பல குறைபாடுகளை அவர் கொண்டிருந்த போதும் – ஜே. ஆர் பற்றி பல்வேறு நிலைப்பாடுகளை முன் வைக்கும் செய்தியாளர்கள், ஆய்வாளர் எல்லோருமே மிகத் தெளிவாக ஒரே விடயத்தில் ஒன்றுபடுகின்றனர். தமிழர் தேசிய இனச் சிக்கலை புரியாதது மட்டுமல்ல; தீர்க்க முடியாதது மட்டுமல்ல; இன்றைய பெரு நெருக்கடி நிலைக்கு சிறிலங்காவை இட்டுச்சென்றதற்கும ஜே. ஆரே மிகப் பிரதான காரணகர்த்தா என்பது தான் அது. அவரது அரசியல் ஐந்தொகை கணக்கு என்றுமே சமப்படுத்தப்பட முடியாதது. வரவாக அவரது பொருண்மிய சீரமைப்புக்கள் இடம் பெற்றாலும் நிரவமுடியாத பற்றாக தேசிய இனசிக்கலை தீர்க்காமை இடம் பெறுவதால் 50 வருட அரசியல் ஐந்தொகைக் கணக்கு முற்றிலுமாக பிழைத்து விட்டது!

ஜே. ஆரின் இந்த பேரினவாத இழிகுணம் தொடக்கத்திலிருந்து காணப்பட்டமை தான் ஆங்குள்ள வியப்பு. 1943 ஆம் ஆண்டு மே மாதம் களனி சட்டசபை தொகுதியில் வெற்றி பெறுவதற்காக தன்னோடு போட்டியிட்ட E.W பெரேராவை கத்தோலிக்கர் எனப் பழித்து, சட்ட சபைக்கு தெரிவானவுடன் 1943 யூன் மாதமே சிங்களம் மட்டும் பிரேரணையை முன்மொழிந்து. தனது 36 வயதிலே சிங்களமும் தமிழும் சமவுரிமை பெற்றால் காலப்போக்கில் சிங்களம் அழிந்துவிடும் எனப்பேசி – அரசியல் வாழ்வை தொடர்கின்றார். இந்தப் போக்கே 1956 களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் அரச மொழி என்று தீமானம் நிறைவேற்றப்பட்டபோதும் 1957 ஒக்டோபரில் பண்டா – செல்வா உடன்பாட்டிற்கு எதிராக கண்டி தலதா மாளிகைக்கு காவடி எடுத்தபோதும் தொடர்ந்தது.

இவையெல்லாவற்றையும்விட மிகப் பிரதானமானது இன்று சந்திரிக்கா–ரத்வத்தை குழு மேற்கொள்ளும் அனைத்து அடக்கு முறைகட்கும், படுகொலைகட்கும், பாவச் செயல்கட்கும் அத்திவாரங்கள் இடப்பட்டதும், ஆயத்தங்கள் செய்யப்பட்டதும் ஜே. ஆர் காலத்திலே தான் என்பதே! இன்று சந்திரிக்கா அலட்டிக்கொள்ளும் புலித்தடை தொடர்பான முன்னேற்பாடுகள் 1978 இல் புலிகளை தடைசெய்யும் சட்ட மூலமும் பின் அதை மாற்றி 1979 யூலையில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்ட காலத்திலே வித்திடப்பட்டன. புலிகளை அழிக்க காலக்கெடு விதிக்கும் கைங்கரியமும் 1979 யூலை 11 ஆம் திகதி தமிழர் பகுதிகளில் அவசரகால நிலையை பிறப்பித்து ''எருமை'' புகழ் பிரிகேடியர் வீரதுங்காவை அனுப்பி ஆறுமாதத்திற்குள் அதாவது 1979 டிசம்பருக்குள் அழிப்பு என நாள் குறித்ததோடு ஆரம்பமாகின்றது. அன்று பண்ணைப் பாலத்திலே சிதைந்து சின்னாபின்னப்படுத்தி போடப்பட்ட இன்பம், செல்வரத்தினத்தோடு ஆரம்பித்த மனிதவதை இன்று கிருஷாந்தி வரை தொடர்கின்றது. 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் மோசடியோடு ஆரம்பித்த தேர்தல் ஏமாற்று வித்தைகள் இப்போதைய யாழ், கிளிநொச்சி உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிப்பு வரை நீள்கின்றன. அன்றைய லலித்தின் தேசிய பாதுகாப்பு அமைச்சு இன்று ரத்வத்தை அமைச்சாகவும், அன்றைய இராணுவ சீரமைப்பு தென்னாபிரிகக, பாகிஸ்தானிய, எஸ்.ஏ.எஸ், கினிமீனி, மொசாட் தொடர்புகள் இன்று மேலும் விரிவாக்கம் பெற்று அன்றைய ஒப்பரேசன் லிபரேசன் தொடர்ச்சியே சூரியக் கதிராக, சத்ஜெயவாக இராணுவ ஆக்கிரமிப்பின் உச்ச வடிவங்களாக தோற்றம் கண்டன. இங்குள்ள விசித்திரமான நகைமுரண் என்னவென்றால் 1977 ஆம் ஆண்டு தேர்தலில் வெல்வதற்காக தமிழருக்காக முதலைக் கண்ணீர் வடித்த ஜே.ஆர் தமிழர் சிக்கல்களை தீர்க்கப் போதுமான சிங்களவரின் நல்லெண்ணத்தை ஆதரவை 50.92 விழுக்காட்டு வாக்குகள் பெற்றதன் மூலம் பெற்றார். அதேபோல் தமிழருக்காக நீலிக் கண்ணீர் வடித்த சந்திரிக்காவும் 62 விழுக்காட்டு வாக்குகள் பெற்று பதவியேறினார். எந்த பதவியை ஒழிக்கப் போவதாக கூறி பதவியை கைப்பற்றினாரோ அதே பதவியைப் பயன்படுத்தி ஜே.ஆர். தொடக்கி வைத்த இனச் சங்காரத்தை முடித்து வைக்க முயல்கின்றார் அம்மையார். இதுபற்றி ஜே. ஆரிடம் வினவிய போது கேலியாக நகைத்த ஜே. ஆர் கூறினாராம் ''இவ்வளவு அதிகாரங்களைக் கைவிட எவருக்காவது பைத்தியமா பிடித்திருக்கும்'' அப்படியானால் தேர்தல் கால வாக்குறுதி... என்கிற கேள்விக்கு ''வாக்குறுதியா'' எனக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாராம். ''5 நட்சத்திர சனநாயகம் நிலவும் நாடு நம் நாடு'' என தன் நாட்டையே வருணித்தார் டிக்கியர் ஜெயவர்த்தனா.

17 ஆம் நூற்றாண்டிலே டச்சுக்காரர் காலத்தில் தமிழ் நாட்டு கரையிலிருந்து வந்து குடியேறிய வணிக மரபில் வந்த தம்பி ஐயா முதலியார் வழிவந்த ஜே. ஆர் தமிழ் மக்கள் மீது ''நாவினாற் சுட்ட வடுக்கள்'' என்றும் ஆறாது. 1975 ஆம் ஆண்டு, யாழ். முற்றவெளியில் பேசும் போது ''பண்டா – செல்வா உடன்பாடு இன்று கொண்டு வரப்பட்டாலும் எதிர்ப்பேன்'' எனத் திமிர்க்கதை பேசியபோது, செருப்புக்கள் வீசப்பட்டன; மேடை இறங்கிய பின் ஜே. ஆர் ''இவை யாழ்ப்பாணத்தான் செருப்புக்கள் என்பதால் என்றும் மன்னியேன்'' என்றும், 1977 இனக்கலவரத்தை தூண்டிப் ''போரா? சமாதானமா? எதற்கும் தயார்!'' என்றும் எத்தனை வடுக்கள். ஆனால், நடந்தது என்ன? எல்லாவற்றையும் மீறி தமிழர் விடுதலைப் போராட்டம் தலை நிமிர்த்திய பின், விடுதலைப் புலிகளால் ஜே. ஆரின் குள்ளநரி திட்டங்கள் தவிடு பொடியானபின் கழிவிரக்கம் கொண்ட ஜே. ஆர் ''என்னிடம் துணிவு, விவேகம், தொலைநோக்கு இருந்திருக்கவில்லை!'' என ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்க நேர்ந்தது. ஜே. ஆர் பற்றிய மிகச் சரியான தமிழ் மக்களின் மனப்பதிவு 1984 ஆம் ஆண்டே தலைவர் வாயால் வெளிவந்தது. ''ஜெயவர்த்தனா ஒரு உண்மையான பௌத்தனாக இருந்திருப்பாரேயானால் நான் ஆயுதம் தாங்க நேரிட்டிருக்காது.'' O

1975 ஆம் ஆண்டு, யாழ். முற்றவெளியில் பேசும் போது ''பண்டா - செல்வா உடன்பாடு இன்று கொண்டு வரப்பட்டாலும் எதிர்ப்பேன்'' எனத் திமிர்க்கதை பேசிய போது, செருப்புக்கள் வீசப்பட்டன; மேடை இறங்கிய பின் ஜே. ஆர் ''இவை யாழ்ப்பாணத்தான் செருப்புக்கள் என்பதால் என்றும் மன்னியேன்'' என்றும், 1977 இனக்கலவரத்தை தூண்டிப் ''போரா? சமாதானமா? எதற்கும் தயார்!'' என்றும் எத்தனை வடுக்கள். ஆனால், நடந்தது என்ன?